www.tamilarangam.net

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



இவர்கள் இங்கே. தாய்மார்கள் அடுத்த பக்கத்தில்.

MILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.21

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கை மூலை

— கல்யாணி

எங்களிடம்
இழப்பதற்கு எதுவுமில்லை.
பாதுகாக்கவும் ஏதுமில்லை.
அதனால்தான்
இன்னமும்
தெருத் தெருவாய்.

எங்கள் மூலதனம்
தேய்ந்துபோன
அலுமினியத் தட்டுத்தான்.
மடிச் சேலையிலும்
ஓட்டைகளதிகமென்பதால்.

எங்கள் தலைமுறை
எங்களுக்கென்று
எதுவும் வைக்கவில்லை.
நாங்களும்
எங்கள் பின்னைகளுக்கென்று
எதுவும் வைப்பதற்கில்லை.

நாங்கள்
கருப்பையில்
இருந்தபோதே
இரைப்பையிடம் யாசித்த
பயிற்சியுடன்
வெளியேறி
இன்னும்
இங்கே
தெருத் தெருவாய்.

பசி
எங்களுக்கு
உணர்வல்ல.
பரம்பரை நோய்.
அடிக்கடி இரப்போம்
குணப்படுத்த.

எதிர்காலம்
இருள்மயமாய்.
ஆனாலும்
ஒரு மூலையில் மட்டும்
நம்பிக்கை ஒளி
நகர்ந்து கொண்டிருக்கும்.

நாங்களும்
நிமிர்வோம் என்று.

www.tamilarangam.net

# யார் காவல்?

இலங்கை இராணுவத்தால் நடாத்தப்பட்ட ஒபரேசன் – லிபரேசன் கொலைகளின் பின் மீண்டும் வடமாராட்சி பல உயிர்களை இழந்துள்ளது. புலிகளின் தாக்குதலால் தமது சகாக்களைப் பறி கொடுத்த இந்திய இர்ராணுவம் வெறி பிடித்து பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. வீடுகளுக்குள் புகுந்து பெண்க்ள், குழந்தைகளையும் தெருவுக்கு இழுத்து வந்து கண்முடித்தனமாகச் சுட்டுக் குவித்துள்ளது. வீடுகள், கடைகளைத் தீக்கிரையாக்கியுள்ளது. இந்திய அரசின் ஏவற்படையான இந்திய இராணுவத்தின் இவ் வெறித் தாக்குதலில் 70க்கும் மேற்பட்ட அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 35க்கும் மேற்பட்டவர்கள் காணமற் போயுள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உறவினர்களையும், வீடுகளையும் இழந்து அகதிகளாகியுள்ளனர். பலர் இலங்கை இராணுவ முகாமில் கூட தஞ்சமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள், குற்றுயிராயிருந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க வந்த மருத்துவர் குழுவைத் தடுத்து நிறுத்திய அராஜகக் கும்பல்கள் அவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளன. தகுந்த சிகிச்சை உரிய நேரத்தில் கிடைக்காமையினாலும் பலர் மரணமடைந்துள்ளனர். பலர் எந்தவிதக் காரணங்களுமின்றி இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சமாதான வேடம் போட்டுக் கொண்டிருக்கும் இந்திய அரசின் நோக்கத்தை கொலை வெறிபிடித்த இராணுவம் மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது என்று தங்கள் நலன்களுக்காக கூச்சல் போடுபவர்களின் குட்டையும் உடைத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவத்தை புலிகள் தாக்கியபடியால்தான் இராணுவம் மக்களைக் கொன்றதாம், அதுவும் பத்திரிகைகள் மிகைப்படுத்துவதைப் போலில்லாமல் 'கொஞ்சப் பேர்தான்'' மோதலில் தவிர்க்க முடியாமல் கொல்லப்பட்டிருக்கிறார்களாம், பலத்த சேதங்கள் இல்லையாம் என்று வடக்கு, கிழக்கு மாகாண சபை முதல்வர் இந்திய அரசுக்குத் துதி பாடி இராணுவப் பயங்கரவாதத்திற்கு வக்காலத்து வாங்கியுள்ளார். ராஜீவ்–ஜே.ஆர் ஒப்பந்தம் மூலம் கிடைத்த 'மூச்சு விடும் சந்தர்ப்பத்தை' கொலைப்படைகளுக்கு ஏவல் செய்வதில் மாகாணசபை சரியாகவே பயன்படுத்திக் கொள்கிறது.

பாராளுமன்றத்துக்குள் நுழைந்துவிட்ட ஈரோஸ் வடமாராட்சிக் கொலைகளுக்கு கவலை தெரிவித்துவிட்டு இந்திய இராணுவம் இப்போதைக்கு வெளியேறக் கூடாது என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டு அப்பாவிகளைக் கொன்று குவிப்பது இவர்களுக்கு 'தேவையான தீமையாக' இருக்கிறதாம்.

இந்திய அரசின் ஆக்கிரமிப்புக்கெதிராக இரத்தம் சிந்திப் போராடும் போராளிகள் களத்தில் மடிய அல்லது தாக்கிவிட்டு ஓடி, ஒழிய, இவர்களின் போராட்ட உணர்வை தங்கள் நலன்களுக்காகத் தவறாகப் பலியிட்டுக் கொண்டிருக்கும் புலிகளின் தலைவர்கள் இலங்கையரசின் பாதுகாப்பில் சுகமாகவே இருக்கிறார்கள்.

இந்திய இராணுவத்திற்குச் சளைக்காமல் ஏற்கெனவே 'புகழ் பெற்ற' இலங்கையரசின் கொலைப்படைகளான இராணுவம், பொலிஸ், கறுப்புப் பூனைகள், பச்சைப் புலிகள் கும்பல்கள் தென்னிலங்கையில் வெறியாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன. நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது 60பேராவது கொல்லப்படுகிறார்கள். ஜே.வி.பி.யால் கொல்லப்படும் தங்கள் சகா ஒருவருக்குப் பதிலாக 12 பேரைக் கொன்று பழிவாங்குவோம் என்று இக் கொலைப்படைகள் பகிரங்கமாகவே சுவரொட்டிகள் ஒட்டியுள்ளன.

அண்மையில் கண்டிப் பிரதேசத்திலுள்ளவர்கள் கைது செய்யப்பட்டு, கல்லூரியொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். பலர் சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர். பாதைகளில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் தினந்தோறும் இளைஞர்களின் சடலங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு இரவும் வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் அரசின் கொலைப்படைகள் இளைஞர்களைப் பிடித்துச் செல்கின்றன. இப்படிப் பிடித்துச் செல்லப்படுபவர்கள் பின்னர் வீடு திரும்புவதில்லை. இவர்களைப் பற்றிய தகவல்கள் இவர்களுடைய குடும்பங்களுக்கும் கிடைப்பதில்லை. அரச படைகளினால் இப்படிக் கொண்டு செல்லப்படுபவர்களே பின்னர் கை, கால்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டப்பட்ட நிலையில் பிணமாக மீட்கப்படுகிறார்கள். இதைவிட பல இளைஞர்களை உயிருடன் தெருவில் கட்டி வைத்து, அவர்கள் நெஞ்சின்மீது ரயர்களைப் போட்டு தீமூட்டிக் கொளுத்தி வெறியாட்டம் போடுகின்றன. அரசின் இக் கொடுமைகளுக்கெதிராகப் போராடிய மனித உரிமைகள் சங்கச் சட்டத்தரணியும் இக் கும்பல்களினால் அண்மையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்னொரு பக்கத்தால் ஜே.வி.பி, தேசப் பிரேமிகளின் வன்செயல்களும் அதிகரித்துள்ளன. ஓகஸ்ட் 20ஆம் திகதிக்குப் பின் பொலிசார் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்யவில்லையானால் அவர்களது மனைவி, பிள்ளைகளைக் கொலை செய்வோம் என ஜே.வி.பி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. இந்த மிரட்டலின்படியே கொலை செய்து வருகிறது. ஆஸ்பத்திரிகள் கூட ஜே.வி பி யின் பயமுறுத்தல்களால் செயலிழந்துள்ளன. பல நோயாளர்கள் உரிய நேரத்தில் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இலங்கையரசுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை, இயக்கங்களுக்கிடையிலான மோதல்களாக மாற்றி, 'மத்தியஸ்தர்" இடத்தைப் பிடித்துக்கொண்ட இந்திய அரசைப் போல், இப்போது இலங்கையரசும் ஜே.வி பி யையும், அரசபடைகளையும் மோதவிட்டு அவர்களைத் தனிப்பட்ட பகையாளிகளாக்கியுள்ளது.

இன, மொழி வேறுபாடுகளில்லாமல் இலங்கை முழுவதிலும் அப்பாவி மக்கள் அனைவருமே பாதுகாப்பில்லாமல் கொல்லப்பட்டு வருகிறார்கள். இதே நேரம் இலங்கையரசு அரசபடைகளின் உயிரையும், மக்களின் உயிரையும் பலியிட்டு தனக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்கிறது. தனது விசேட பாதுகாப்புக்கென ஆயுத, பண உதவிகள் செய்து கொலைக்கும்பல்களை வளர்த்து வருகிறது.

, மக்கள், அரச ஊழியர்கள் உயிரை இழக்கும் அதே நேரம் 'மக்கள் பிரதிநிதிகள்" என்று சொல்லிக் கொள்ளும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எல்லோரும் மக்களின் வரிப் பணத்தில் தங்களுக்கென்று மெய்பாதுகாவலர்படை, தொண்டர்படை, காவலர் படை, உளவுப்படைகள் என்று பாதுகாப்பு அரண்களை அமைத்துக்கொண்டு, ஆயுதங்களுடன் தங்கள் 'பணிகளை' செவ்வனே 'முடித்து' வருகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாணசபை உறுப்பினர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கும் வைபவம் 'பாராளுமன்றத்திலேயே' இடம்பெறுகிறது. 'ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமே" ஆயுதங்களை வழங்கி 'மக்கள் பிரதிநிதிகளை" கௌரவிக்கிறார்கள்.


www.tamilarangam.net

மக்களை வைத்து அரசியல் நடத்தியவர்கள் எல்லோரும், அரசு, அரச படைகள், இயக்கங்கள் என்ற பேதங்களைக் கடந்து, தங்களுக்குள் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பரிமாறிக்கொண்டும், மக்களின் பணத்தைப் பங்குபோட்டுக் கொண்டும் தங்கள், தங்கள் இஷ்டப்படி 'காட்டுமிராண்டித் தர்பார்" நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் இப்படி விமர்சித்துக் கொண்டிருக்கும் நாங்கள் கூட தற்போதைக்கு பாதுகாப்பாகவே உள்ளோம்.

ஆனால் இலங்கைத் தீவிலிருக்கும் மக்களின் நிலை என்ன? இவர்களுக்கு யார் காவல்?

எதிரிகள் எல்லோரும் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்து தங்களை இனம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் இன, மொழி எல்லைகளைக் கடந்து தங்கள் பொது எதிரிகளை எதிர்கொள்ள மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இந்த ஒன்றிணைவே மக்களுக்கு காவலாயிருக்கும் கேடயமாக இருப்பதுடன் பொது எதிரிக்கெதிரான போராட்டத்திற்குப் பலமளிக்கும் சக்தியுமாகும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

கலம் 19 கிடைக்கப் பெற்றேன். தூண்டிலின் துணிந்த நேரான போக்கு வரவேற்கப்படக் கூடியதே.

ஆசிரிய தலையங்கம் ஆய்வுக் கட்டுரை வடிவுக்குப் போய்விட்டது. தொடர்ந்தும் கடலோடிகளின் முற்போக்கு புரட்சிகர சக்திகள் ஒன்றிணைய வேண்டும், மக்களை சரியான வழியில் அரசியல் மயப்படுத்தவேண்டும் போன்ற கோசங்கள் கற்பனையில் புரட்சி பேசுபவர்களையே ஞாபகமூட்டுகிறது.

புரட்சிகர சக்திகள் ஒன்றிணையவேண்டும், மக்கள் அரசியல் மயப் பட வேண்டும் என்பவை பிழையான கருத்துகள் அல்ல. ஆனால் இன்றையநடைமுறையில் சாத்தியப்படக் கூடியவைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஈழத்திலுள்ள முற்போக்குச் சக்திகள் யாவை? உதிரிகளாக இருப்பவர்கள் கூட இணைந்து ஒருவேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் உண்டா? இச் சூழ்நிலையில் வெறும் கோசங்களை முன்வைப்பதை விடுத்து ஒரு அரசியல் மாற்றத்தை உருவாக்க எத்தனிக்க வேண்டும். சாதகமான அரசியல்மாற்றங்களினூடாகவே ஈழத்தின் புரட்சிகர சக்திகள் அடுத்த கட்டத்திற்கு நகர முடியும்.

போராட்ட இடைநிறுத்தம் புரட்சியை மழுங்கடிக்கும் செயல் என்றால் இன்றைய போராட்ட சக்திகள் தொடர்ந்து விடாப்பிடியாகப்போராடிப் பெறும் வெற்றி புரட்சியாகிவிடுமா? உண்மையான விடுதலைதான் கிடைத்துவிடுமா?

இலங்கை, இந்திய ஒப்பந்தம், மாகாணசபை சம்பந்தமாக தூண்டிலின் கருத்தை அறிய முடியாதுள்ளது. இவற்றைத் தூண்டில் விமர்சிக்கும் போது ஏற்றுக்கொள்வது போலவும், பின் இவைகள் வெறும் பம்மாத்து எனும் போது குழப்பமாகவும் உள்ளது. ஆசிரிய தலையங்க முடிவிலும் இந்தியப்படை வெளியேற்றம் சம்பந்தமாக உறுதியான கருத்தொன்றைத் தூண்டிலால் கொடுக்க முடியவில்லை.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்திய நாட்டாண்மை சம்பந்தமாக ஆய்வு செய்யும்போது, உலக ஏகாதிபத்தியங்களினால் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு இருக்கும் அச்சுறுத்தல்களையும் கவனத்தில் கொண்டேயாக வேண்டும். இந்திய தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறையுள்ள சக்திகள், இந்திய ஒருமைப்பாட்டிற்கு என்றென்றும் உறுதுணையாக இருந்து ஆதரவு கொடுக்க வேண்டியது அவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சியமாகும்.

ஐரோப்பியநாட்டின் பல்வேறு சிரமமான சூழ்நிலையிலும் தொடர்ந்து 19 கலங்களைத் தந்த ஆண்டில் தொடர்ந்து வளர வாழ்த்துகள்.

மனோகரன்
பிரான்ஸ்

ஆசிரிய தலையங்கங்கள் நிச்சயமாக நீங்கள் குறிப்பிட்டிருப்பது போல ஆய்வுக் கட்டுரைகள்தான். கிடைக்கும் தரவுகளைக்கொண்டு, எமக்குத் தெரிந்தவரையில் பிரச்சினைகளை ஆய்வு செய்யத்தான் முடியுமே தவிர, இங்கிருந்தபடி இலங்கைக்கு 'புரட்சியையோ', 'றெடிமேட்' தீர்வுகளையோ ஏற்றுமதி செய்ய முடியாது. இந்தவகையில் முற்போக்குப், புரட்சிகர சக்திகள் ஒன்றிணைய வேண்டும், மக்களைச் சரியான வழியில் அரசியல் மயப்படுத்த வேண்டும் எனக் கூறுவது இப்போதுள்ள தேவைகளாகும். தற்போதுள்ள புறச்சூழ்நிலைக் காரணிகள் சமூக மாற்றத்தின் வேகத்தை தடைப்படுத்துமே தவிர தடுத்துவிட மாட்டா. வேறுவிதமாகச் சொல்லுவதானால், இன்றைய சம்பவங்கள்தான் மேற்படி தேவைகளை தேட உந்தும் சக்திகளாக உள்ளன. இவை வெறும் கோசங்கள் மட்டுமே என நீங்கள் கருதினால் நீங்கள் குறிப்பிட்டிருக்கும் 'ஒரு அரசியல் மாற்றத்தை உருவாக்க எத்தனிக்க வேண்டும்' என்பது கூட வெறும் கோசமாகத்தானே இருக்க முடியும்?

போராட்ட இடைநிறுத்தம் புரட்சியை மழுங்கடிப்பதாகக் குறிப்பிடவில்லையே. இந்த 'இடைநிறுத்தத்தை' சமாதானம், ஐனநாயக நீரோட்டம், குறைந்தபட்சத் தீர்வு, நிம்மதிபோன்ற வார்த்தை ஜாலங்களால் வர்ணித்து, அநீதிக்கெதிரான மக்களின் போர்க் குணம்சத்தை மழுங்கடிப்பதைத்தான் குறிப்பிடுகிறோம். நிரந்தரமற்ற சூழலை நிரந்தரமானதென போலியாக நியாயப்படுத்துவதைத்தான் மதவாதிகளும் செய்து வருகிறார்கள்.

எந்தவிதமான சூழ்நிலையிலும் புரட்சிக்கான தேடல் இயங்கிக் கொண்டேயிருக்கும். இதில் நடைமுறைச்சாத்தியமானவை, சாத்தியப்படாதவை எனத் தரம் பிரிப்பது ஒரு சூழலை வெளிப்படையாக நாம் பார்ப்பதைக்கொண்டே அமைகிறது.

இலங்கை–இந்திய ஒப்பந்தம், மாகாணசபைகள் பற்றி இதுவரை பல கலங்களில் குறிப்பிட்டுள்ளோம்.

இந்தியாவில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராக வன்முறையையும், பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்துவிடும் அரச இயந்திரம் (இந்திய இராணுவம்) இலங்கையில் ஒடுக்கப்படும் மக்களுக்கு தோழமையாக எப்படி இருக்க முடியும்? இந்திய இராணுவம் என்பது ஒடுக்கப்படும் மக்களுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெதிரான அரச இயந்திரம் என்பதில் இலங்கையிலிருந்து இதன் வெளியேற்றத்தை உறுதியாக ஆதரிக்கிறோம்.

ஆளும் வர்க்கங்கள் 'கூறிக் கொள்ளும்' ஒருமைப்பாட்டிற்கல்ல, இந்திய உழைக்கும் மக்களின் சமூகமாற்றத்திற்கான போராட்டத்திற்கும், அதற்கான ஒருமைப்பாட்டிற்குமே என்றென்றும் உறுதுணையாக இருந்து ஆதரவு கொடுக்க வேண்டியது அவசியம்.

— கடலோடிகள்

தூண்டில் சமீப காலமாய் முற்போக்கான ஆக்கங்களுடன் வருவதுடன், சமுதாயத்தில் நடக்கும் பிரச்சினைகளுக்கு யாந்திரியமாய் தீர்வுகளை வழங்காமல், சமுதாயத்தை ஆய்வு செய்தே முடிவுகளை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்நிலைப்பாடே சரியென நாமும் கருதுகிறோம்.

முன்பு வெளிவந்த தூண்டில்களில் மற்றவர்களுடைய கருத்துகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் போக்கு நீண்டகாலமாய் இருந்தது. இதற்கு நாம் விமர்சனரீதியாக எழுதிய கடிதங்களுக்கு பொறுப்பற்ற பதில் வந்ததையிட்டு நாம் தூண்டிலில் நம்பிக்கையிழந்திருந்தோம். சமீப காலங்களில் வாசகர்களுடைய ஆக்கங்களைப் போட்டு, அதில் தூண்டிலின் நிலைப்பாட்டை விமர்சனப்பகுதியில் தெளிவுபடுத்துவது மிகவும் சிறப்பானது. தூண்டிலின் இவ் வளர்ச்சிக்கு இலக்கியச் சந்திப்பும் பெரும் தாக்கம் செலுத்தியிருக்குமெனக் கருதுகிறோம்.

வாசகர் வட்டம்
சுவிற்சலாந்து

கலம் 13இலிருந்து ஆசிரிய தலையங்கள் காத்திரமானவையாக உண்மையானவையாக இருக்கின்றன. 'விடுதலை' இயக்கங்களின் கட்டுமீறிய அராஜகங்களை கண்டிக்க வேண்டிய, அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டிய கடமை உங்களைப் போன்ற

சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கும் உண்டு. பலருக்கு இந்த அராஜகங்கள் பற்றித் தெரிந்தும் 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்ற நிலையிலேயே இருக்கிறார்கள். யாராவது இப்படி மணியைக் கட்டினால் கூட அதைப் பிடித்து ஆட்டவும் இவர்கள் தயாராயில்லை. இப்படி அராஜகங்களில் 'பால் குடிக்கும்' கும்பல்களிலுல்தான், மக்கள் இன்னும் கூட 'விடுதலை' இயக்கங்கள்தான் என்ற மாயையில் இருக்கிறார்கள். எனவே இந்த மாயையிலிருந்து விடுவித்து சரியான போராட்டத்தை நோக்கி மக்களின் கவனத்தை திருப்புவது இன்றைய நிலையில் அவசர தேவையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைசியாக வந்த ஞாண்டிலில் இங்குள்ள கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவோம் என்று குறிப்பிட்டிருப்பது சரியே. ஆனல் அதற்காக கண்டிப்பது அல்லது குற்றஞ்சாட்டுவது மட்டுந்தான் கருத்துச் சுதந்திரம் என்றல்ல. உங்களுக்கிருக்கும் கருத்துச் சுதந்திரத்தை தவறுகளைக் கண்டிக்கப் பயன்படுத்துவதோடு உங்களது சரியான கருத்துகளைத்தெரிவிக்கவும் பயன்படுத்துங்கள்.

கடைசியாகவந்த இரண்டு ஞாண்டில்களிலும் தரமான ஆக்கங்களே இடம்பெற்றனவாயினும், சிறுகதைகளோ வேறு சிறுபகுதிகளோ இடம்பெறாதது நிறைவானதாக இருக்கவில்லை. கவர்ச்சிகள் தேவையில்லை என நீங்கள் தெரிவித்தாக இலக்கியச் சந்திப்புக் கட்டுரையில் வாசித்தேன். நீங்கள் 'கருதும்' கவர்ச்சிகள்தேவையில்லாவிடினும், சிறுகதைகள், கவிதைகள் போன்ற 'அனைவரையும்' கவரும் அம்சங்கள் நிச்சயமாகத் தேவை. நீங்கள் பல்கலைக் கழகமாணவர்களுக்காகவா அல்லது சாதாரண வாசகர்களுக்காகவா ஞாண்டிலை வெளியிடுகிறீர்கள் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளுங்கள். 'பாடப் புத்தகம்' போலிருக்கும் அமைப்பை மாற்றி ஓவியங்கள், சிறிய துணுக்குள், கதைகள் போன்றவற்றைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்வதால் தரம் குறைவதில்லை.

'பாத நீராட்டு' என்ற கவிதையில் 'வர்க்க பேதமற்ற...' என்று தொடரும் பகுதி தனியாக இருப்பதுபோலவே, கவிதையிலும் ஒட்டாமல் தனித்து உள்ளது. கொம்யூனிஸம், சோசலிஸம் போன்ற சொற்கள் தொடர்ந்தும் அந்நியமாகவே இருக்காமல், மக்களின் பாவனைக்குவரவேண்டுமென்றுலும், ஆக்கங்களினின் முடிவிலும், தொடக்கத்திலும் இப்படியான சொற்களைச் சேர்த்து விடுவது அரசியற் கட்சிகளின் கோசம் மாதிரி கேலியாகவே இருக்கும்.

'புதிய சுவடுகளில்' சொல்லவந்த விடயம் எந்தவித பூச்சுகளுமில்லாமல் நேரடியாகச் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கக் கூடியது. 18ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் பிய்ந்துபோன கிடுகு வேலி வழியே 'வெளியே' அவர்கள் பார்க்கவில்லை. இன்னும் உள்ளேதான் பார்க்கிறார்கள். அவர்களை வெளியே பார்க்க வைக்க வேண்டும்.

பின் அட்டையில் உள்ள சிவத்தின் கவிதையில் 'நான் பிரசவித்த குழந்தைக்காக பிரத்தியேக சிந்திப்புக்கு இடமில்லை நமது குழந்தைகள் என்றனபோது' என்ற வரிகள் மிகவும் அழுத்தமானவை. இப்படியான உணர்வின்மையே இன்றும்கூட எங்களை போராட்டத்தில் முழுமையாக இணைக்க முடியாதபடி வைத்துள்ளது. கடைசிப் பந்தியில் சிட்டுக்குருவியும் சமபங்கில் சிறகடிக்க வேண்டும் என எழுதப்பட்டுள்ளது. சிட்டுக் குருவியும் என்றால் இன்னும் வேறு எ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வையும் பறக்க வேண்டும்?வல்லூறு களா?பருந்துகளா?

தனஞ்செயன்
மே.ஜேர்மனி

களின் பாதையை மாற்றி விடாதீர்கள்.

வே.உதயா
சிங்கப்பூர்

தூண்டில் மூலம் உங்கள் சிந்தனைகளை நாமும் அறியக் கூடியதாக உள்ளது.எனினும் மனநிறைவு ஏற்படவில்லை.இன்னும் நிறைய ஆக்கங்களைச் சேர்த்துக் கொள்ளலாமே?இலக்கியச் சந்திப்பு வரவேற்கக் கூடிய விடயமாகும்.இதில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு யாரும் எதிர்த்து வாதிட்டதாக தெரியவில்லை. சிந்தனைவாதிகள் எல்லோரும் எங்கே போய்விட்டார்கள்?அல்லது யாருக்கும் துணிவு இல்லையா?

இலக்கியச் சந்திப்பில் பரிசுகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.எழுத்தாளர் எல்லோருக்கும் பரிசுகள்தான் வாழ்த்துகள் என்றால் எதை அவர்கள் எழுதுவது என்றுதெரியாமல் 'தூண்டில்' கடலில் மூழ்கிவிடும் என நினைக்கிறேன். ஏன் பரிசு என்றுகூறி மானத்தை வாங்குகிறீர்கள்?பரிசைக் கொடுத்து,பாராட்டைக் கொடுத்து எழுத்தாளர்

தூண்டிலில் சிக்கும் மீன்கள் எல்லாம் தரமாகத்தான் இருக்கின்றன.ஆனால் வாசகர் கடிதங்களுக்கு நீங்கள் பதிலளித்துள்ள விதம் நிறைவாக இல்லை.கலம் 19இல் பிரசுரமாகியுள்ள இலக்கியச் சந்திப்பு எனும் கட்டுரையில்,நிருபா என்பவர் தனக்கு ஆண்கள்மேல் இருக்கும் வெறுப்பைத்தான் ஆண் கதாபாத்திரங்களை கதையில் கொலை செய்வதன் மூலம் தீர்த்துக்கொள்வதாகக் கூறியுள்ளார்.இதே கருத்தை இவரைவிட வெறுப்புடன் தேவிகா என்பவரும் கூறியுள்ளார்.இவர்களுடைய தந்தை,உடன்பிறந்த சகோதரர்கள் எல்லோரும் ஆண்கள்தானே.அவர்கள்மேல் இவர்களுக்கு வெறுப்பில்லையாமா?இவர்கள் இப்படிச்சொல்லும்போது யாரும் எதிர்த்து விவாதிப்பது இல்லையா?அல்லது தூண்டிலின் பக்கங்கள் போதாமல் இவற்றையெல்லாம் நீக்கிவிட்டீர்களா?

(தொடர்ச்சி 4ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஒரு தொழிலாளியும், ஒரு தொழிலாளியும்.

தலைக்குக் குளித்து, தூசுகளைத் தற்காலிகமாக விரட்டியபின் உடை மாற்றிக்கொண்டு, உதயன் வெளியே வந்தான்.

காந்தனிடம் மாறிய காசின் ஒரு பகுதியை இன்று கொடுப்பதாகத் தவணை. சம்பளத்தை வங்கியிலிருந்து வழித்தாயிற்று. முடிவதற்குள் கூடுமானவரையில் கடன்கள் தீர்க்கப்பட வேண்டும். இல்லையேல் பின்னர் பல்லிளிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## பார்த்திபன்

பஸ்தரிப்புக்கு வந்து காத்து நிற்கையில், வேலை செய்யும் போதிருந்த இறுக்கம் தளர்ந்து இலேசானான். விஞ்ஞானத்தால் அநியாயமாகப் பாதிக்கப்பட்ட வெய்யில் உக்கிரமாயிருக்க, பலர் இயலுமான வரை தங்கள் உடம்பைப் பகிரங்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

'வேர்த்தால் நல்லாயிருக்கும்' என்று நினைத்துக் கொண்டான். பலர் தாங்கிக் கொள்ள மாட்டாமலிருந்தார்கள்.

நாற்பத்தியேழாம் இலக்கம் வந்து, கதவுகளை விரிக்க, மாதச்சீட்டு வைத்திருந்ததால் சாரதியிடம் போகாமல், பின் இருக்கைகளில் ஒன்றில் அமர்ந்தான்.

பஸ் ஓடத் தொடங்கிய பின்னரும் புழுக்கமாயிருக்க, காரணத்தை ஆராய்ந்தபோது, குட்டி ஜன்னல்கள் சாத்தப்பட்டிருந்தன. அருகே இரண்டு அழகிய கிழவிகள் ஏதோ ஒரு நிகழ்வை தங்களுக்கே உரித்தான பாணியில் இழுத்துக் கொண்டிருந்தார்கள். எழுந்து ஜன்னலைத் திறக்க நினைத்தவன் அவர்களில் அழகாக வைக்கப்பட்டிருந்த தலைகளைப் பார்த்ததும் 'சுகங்கள்' என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

று பேசாமலே இருந்து விட்டான்.

கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் அழகிய நீட்டுக் கட்டிடங்கள் பிரமாதமாய் ஓடி மறைந்தன. மாக்சிசக் கண்ணால் அவற்றைப் பார்க்கையில்தான் கோரம் தெரிந்தது.

'எத்தினை சனங்களை வீடில்லாம தெருவுக்கு அனுப்பிப் போட்டு கட்டிடங்களை உயத்திக் கொண்டு போறாங்கள். அந்தப் பதினைஞ்சாவது மாடியில, மூலேயில, குசன் கதிரையில சுத்திக்கொண்டு, பத்து ரெலிபோனில ஒண்டை எடுத்து, இன்னொரு கட்டிடம் வாங்கிறதைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்கிறவனுக்கு எப்பிடி உவ்வளவும் முடிஞ்சிது? பிறக்கேக்கயே டொலரையும் எண்ணிக் கொண்டா பிறந்தவன்? ஒண்டில் உவன் தானே சொந்தமாய் மற்றவையை தட்டிச் சுத்திச் சேத்ததாய் இருக்க வேணும். அல்லாட்டி உவன்ரை பரம்பரை தாங்கள் சுருட்டினதை வாரிசுக்கு விட்டுப் போட்டு கல்லறைக்கை கிடக்க வேணும். உவன் ஒருத்தனை பதினைஞ்சாவது மாடியில வைக்கிறதுக்கே எத்தினை சனத்தை நாசமாக்கியிருப்பங்கள்?'

இறுக்கமான, கட்டை உடுப்புகளுடன் உதயனுக்கு முன்னிருக்கைகளில் வந்தமர்ந்த மாணவனும், மாணவியும் இருந்தாப்போல ஒருவர் உதட்டை மற்றவர் கௌவி, சத்தம் செய்யாமல், தீவிர தேடுதலில் இறங்கினார்கள். அவர்களுடைய தொலைக்காட்சிப் பெட்டிகளும், கதைப் புத்தகங்களும் இப்படிக் கனக்க விளையாட்டுகளை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்திருந்தன.

அவர்களுக்கு எதிரேயிருந்த இரண்டு சிறுவர்கள் இவர்களின் முயற்சியைப் பார்த்து தங்களுக்குள் ஏதோ கெட்ட சமாச்சாரம் சொல்லிச் சிரித்துக் கொண்டார்கள்.

முதலில் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உதயன் மறுபடி மாவன்னுக் கானுவால் பார்த்தான்.

'இந்த முதலாளித்துவம் தங்கட நலத்துக்காக கலாச்சாரத்தை எப்பிடியெல்லாம் சீரழிச்சுவைச்சிருக்குது. இப்ப முன்னுக்கு வாய் சூப்பிக் கொண்டிருக்கிற பெடியனிட்டயும், பெட்டையிட்டயும் எவ்வளவு பொறுப்புகள் இருக்குது. எங்களை என்னத்துக்காண்டி இந்த முதலாளித்துவ அரசாங்கங்கள் படிப்பிக்குது? எப்பிடியான படிப்பைச் சொல்லித் தருகுது? படிச்சு முடிய எங்களை எப்பிடிப் பயன்படுத்தப் போகுது? ஆரோ கொஞ்சப் பேரை மட்டும் வசதியாய் வாழ வைக்க எங்களை எப்பிடிப் பிழியப் போகுது? இதுகளுக்குச் சம்மதமில்லாட்டி றோட்டில நிக்கப் போறமே என்டதையெல்லாம் இவை யோசிக்க வேண்டாமே? அதுசரி இப்பிடியெல்லாம் இளசுகள் யோசிச்சுப் போடப் படாதென்டு தானே அரசாங்கள் கலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச்சாரத்தைச் சீரழித்து ஆக்களை இப்பிடி வேற மயக்கத்தில வைச்சிருக்கு'

பஸ் சிவப்புக்கு நின்று, மஞ்சளுக்கு உறுமி, பச்சைக்கு மறுபடி ஓடியது. ஒழுங்கான சாலை விதிகளின்படி வாகனங்கள் மயிரிழையில் விலத்திக் கொண்டிருந்தன. கோடை காலச் சம்பிரதாயமாக ஆங்காங்கே பாதையைக் கிளறிக் கொண்டிருந்தார்கள்.

உதயன் பஸ்ஸிலிருந்து இறங்கி, கட்டிடக் குவியல்களுக்குள் காந்தனின் அறையை நோக்கிப் போனான். வேலை செய்கின்ற படியினால் அவனால் அகதிகள் விடுதியிலிருந்து விடுவித்து தனியாக வசிக்க முடிந்தது. சுற்றிலும் டொச் அயலவர்கள். அதனால் அவனது வசிப்பிடமும் தமிழிலிருந்து வித்தியாசப்பட்டிருந்தது.

அழைப்பு மணியை அழுத்தி, திறக்கப்பட்ட வாசற் கதவால் படிகளேறி, காந்தனின் அறைக்குள்போனபோது, அங்கு ஏற்கனவே யோகேஸ்வரன், சண்முகநாதன், ரவீந்திரன் அமர்ந்து ரீ.வியில் ஸ்ருடியோ அயன்ஸ் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேற்கு நாடுகளின் அணு, இரசாயனக் கழிவுகளை தென்னாபிரிக்காவின் ஒரு மூலையில் ஆறுதலாக இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

"வேலை முடிஞ்சு நேர வாறாய் போல"ரவீந்திரன் உதயனை விசாரித்தான்.

"உம்" என்றபடி அவர்களருகில் அதே செற்றியில் உதயனும் அமர்ந்து கொண்டான்.

"டேய், உதயன் வந்திட்டான். இனி தொழிலாளி, முதலாளியெண்டு அறுக்கப் போறான். முதல் உந்தப் புரூக்கிறுமை மாத்துங்கோடா"சண்முகநாதன் எச்சரித்துவிட்டு, முந்திரம் பெய்யப் போக, ஏனையோர் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"நக்கலாயிருக்கென்ன" உதயன் அம்பத்தாறு சென்ரிமீற்றருக்குள் தென்னாபிரிக்காவில் நிகழும்கொடுமையைப் பார்த்தான். வேக ஆரம்பித்தது.

சமையலறையில் நான்குபேருக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த காந்தன் உதயனின் வரவு கேட்டதும், சுடுதண்ணியை மட்டும்மேலதிகமாகப் பாவித்து ஐந்தாக்கினான். ரவீந்திரனுக்கு மட்டும் சீனியை குறைத்துப் போட்டான். ஏனெனில் அவன் டொச் பெட்டையை சிநேகிக்கிறான்.

போட்டு முடிந்ததும், ஊர்த் தேத்தண்ணிக்கடைப் பாணியில் ஐந்து கிளாசுகளையும் இரண்டு கைகளில் கொண்டு வந்து, செற்றிக்கு முன்னலிருந்த வட்ட மேசையில் வைத்தான்.

"என்னடாப்பா, வந்திருக்கமுந்தி ரீ கொண்டு வாறாய்?"உதயன் தென்னாபிரிக்காவில் கவனம் வைத்தபடி சும்மா கேட்டு வைத்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இது பெரிய வேலையே? தண்ணிதானே?" காந்தன் தொழில் நுணுக்கத்தை மறைக்கவில்லை.

"இந்தியனுமி போகுதாம்?" சன்முகநாதன் ரொய்லற்றிலிருந்து வெளியே வந்தான்.

"கிழிச்சாங்கள். சும்மா பேக்காட்டுறாங்கள். அறுநூறு கப்பலில போக, ஆயிரம் பிளேற்றில பலாலிக்கு வரும். காயம்பட்டவை, வருத்தக்காறரை எடுத்துப்போட்டு பிறெஷ்ஷா புது ஆக்களை அனுப்புறதுக்கான மெதேட்தான் உது" என்று உதயன் தேநீரை எடுத்துக் கொண்டான்.

தென்னபிரிக்கா முடிந்து வேறு நிகழ்ச்சி வர, காந்தன் ரீ.வியை அணைத்தான்.

பார்ப்பதைவிட கதைப்பதில்தான் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். வாரத்தில் நாலைந்து நாட்கள் இப்படி ஒன்றுகூடி பலதையும் பிறகு பத்தையும் ஆராய்வார்கள்.

ஆளாளுக்குத் தேநீரை உறிஞ்சி அன்றைய விவாதங்களுக்குத் தங்களைத் தயாராக்கிறார்கள்.

"ஏன்ராப்பா இந்தியனுமி போக வேணுமெண்டு விரும்புறாய்? அவங்கள் போனா பழையபடி சிலோனுமியெல்லே வந்திடும்?" யோகேஸ்வரன் இக் கேள்வியை பலமுறை கேட்டிருக்கிறான். அவனுக்கு இந்திய இராணுவம் திரும்பிப் போவதில் அவ்வளவு சம்மதமில்லை இலங்கை இராணுவத்தின் அபாயம் இருக்கின்றதென்பதால் மட்டும்.

"அந்நிய இராணுவம் எங்கட மண்ணில ஏன் இருக்க வேணும்? அப்பாவிச் சனங்களைப் படுகொலைசெய்து, பொம்பிளையளைச் சித்திரவதைப்படுத்தி, படிப்பை நாசமாக்கி... இப்பிடியெல்லாம் அட்டகாசம் செய்யிற இராணுவத்தை இதே மாதிரியான வேற இராணுவம் வரப்படாதெண்டதுக்காண்டி நீ உன்ரைபாட்டில செய்யெண்டு விடுறதே?" என்றான் சன்முகநாதன்.

"யாழ்ப்பாணச் சனந்தான் இந்தியனுமியை போகச் சொல்லுது. மட்டக்களப்பு, திருகோணமலைச்சனங்கள் போக வேண்டாமாம். இதுக்கென்ன சொல்லுறாய்?" யோகேஸ்வரனும் விடவில்லை.

"இதுதான் இந்தியாவின்ரை கெட்டித்தனம். பிரித்தானியற்றை பிரிச்சாளும் தந்திரத்தை இந்தியனரசாங்கம் இப்ப புது மெதேட்டில பாவிக்குது. வடக்கில தமிழ்ச்சனத்துக்கெதிராயும், கிழக்கில சப்போட்டாயும் இருக்குது. கிழக்கில இப்போதைக்கு இந்தியனுமி சப்போட்டாயிருக்கெண்டதுக்காண்டி ஒரு பயங்கரவாத இராணுவத்தை ஆதரிக்கலாமே? மற்றது எவ்வளவு நாளைக்கு ஆமி கிழக்கில அமைதியா இருக்கப் போகுது? அங்கயும் கெதியில

www.tamilarangam.net

முகமூடியைக் கிழிக்கத்தான் போகுது" சண்முகநாதனும் தன் பக்க நியாயங்களை விருவதாயில்லை.

"இதைவிட இலங்கை பேரின வாத அரசைக் குறி வைச்சு நடத்தத் தொடங்கின போராட்டம் எப்பிடி இப்ப சிதைஞ்சு போச்சுத் தெரியுமே? ஆளாளுக்கு குழுவாய் பிரிஞ்சு தங்கட பலத்தைக் காட்டுற. துக்காண்டியும், பதவியளுக்காண்டியும் பொது எதிரியையும் மறந்து, கொலையும், கொள்ளையுமாய் தங்கடசுயருபத்தைக் காட்டிக்கொண்டு நிக்கினம்" என்றான் உதயன்.

"நீதானே சொன்னனி, இவ்வளவு நாளும் நாட்டில நடந்து ஏதோ குட்டி முதலாளியளின்ரைபோராட்டமெண்டும் இனி நடத்தப்போறதுதான் தொழிலாளியளெண்டும். பிறகேன் இப்ப நடக்கிறதைப் பற்றிக் கவலைப்படுறாய்?" சண்முகநாதன் புரியாமல் கேட்டான்.

"உனக்கு நான் சொன்னதுவிளங்கேல. தேசிய விடுதலைப் போராட்டத்தை எப்பவும் குட்டி முதலாளியளும், பூர்சுவாக்களுந்தான் முன்னெடுப்பினம். ஏனெண்டால் அந்தத் தேவை அப்ப அவைக்குத்தான் அவசரமாயிருக்கும். இந்த வர்க்கத்தால நடத்தப்படுற போராட்டத்தில இப்பிடித்தான் பின்னடைவுகளும், சமரசங்களும், பேரங்களும் சகசமாய் நடக்கும். இந்த வர்க்கத்தாலதொடங்கப்பட்ட போராட்ட அலையை உண்மையான மக்களுக்கான, மக்களின்ரை உண்மையான விடிவுக்கான போராட்டமாய் மாத்த வேண்டினதுதான் இனிச் செய்ய வேண்டினது. அதுக்கு இப்ப இருக்கிற சந்தர்ப்பம் பாவிக்கப்படாம, நடத்தினபோராட்டத்தையே கேலிக்கூத்தாக்கி, போராட்டத்தைப் பற்றின வெறுப்பை சனங்களுக்கு மத்தியல இயக்கங்களும், இராணுவங்களும் விதைச்சுக்கொண்டிருக்கிறதை எப்பிடிக் கண்டுகொள்ளாம இருக்கலாம்?" என்று உதயன் சொன்னது நிச்சயமாக யோகேஸ்வரனுக்கு விளங்கவில்லை.

"என்னடாப்பா கதைக்கிறியள்? குட்டி, கன்டு, பூர்சுவா, புண்ணாக்கெண்டு... உதையெல்லாம் விட்டுப்போட்டு எல்லாருக்கும் விளங்கிற மாதிரிக் கதையுங்கோவன். அட்வான்ஸ்லெவல் படிச்சுப் போட்டு கைபிங்கல் ரேசா சைன்சிலைப் பிடுங்கித் தலையில வை எண்டு சொல்லுற மாதிரித்தான் உங்கட கதையளும். அஞ்சுறு புத்தகத்தைப் படிச்சுப்போட்டு, உங்களுக்குத் தெரிஞ்ச சொல்லுகளை வைச்சு விளாசினுதாங்கள் ஆவெண்டு பாத்துக்கொண்டுநிக்கிறதே?"

சண்முகநாதனும்" அதென்டா உண்மதான்" என்று ஒத்துதினன்.

ரவீந்திரன் இவற்றில் அதிகம் பற்றில்லாமல் ரீ. வியை உயிர்ப்பித்து, ஆர். ரி. எல் லைப் பிடிக்க, விளம்பர நிகழ்ச்சியில் சம்புவையும்பெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்னையும் காட்டினார்கள். அந்தப்பெண் நிச்சயமாக முழு உடம்பையும் காட்டுவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்க, காந்தன் ரிமோட்கொன்றோலரை எடுத்து ரீ.வியை சாகவைத்தான்.

"ஏதோ பெரிசா கிழிக்கிற மாதிரி இஞ்ச கிடந்து வாய் கிழியக்கத்துகினம்" ரவீந்திரன் முணுமுணுத்தான்.

உதயன் மறுபடி ஆரம்பித்தான். "யோகேஸ் சொல்லுறதிலயும் நியாயமில்லாமலில்லை. இப்பிடிச்சொல்லுகளை, இந்த விசயங்களைப் படிக்கிறதுக்கு எங்களுக்கு முந்தி எப்ப சந்தர்ப்பம் கிடைச்சது? ஆர் சொல்லித் தந்தது? அல்லாட்டி நாங்களாவது அக்கறை காட்டினனாங்களோ எங்களுக்கு மறைக்கப்பட்ட விசயங்களை நாங்களா தேடிப் படிக்கிற மட்டும் இப்பிடியான சொல்லுகள் அந்நியமாய்த்தானிருக்கும். முதல் சொன்னதையே விளங்கப்படுத்திச் சொல்லுறதெண்டால், சனங்களின்ரை வயித்தில அடிக்காம கடையைப் பூட்டுங்கோ என்டு சொன்னால் கடைக்காறர் கடையைத் திருப்பியும் திறக்கத்தான் போராடுவினமே தவிர சாமான்கள் வாங்கேலாம பட்டினி கிடக்கிற சனத்துக்கு விடிவு வாறதுக்காண்டி போராட மாட்டினம். ஆறு பசியோட தெருவில இருக்கிறவைக்கு மற்றவையின்ரை கஷ்டங்களையும் புரிஞ்சுகொள்ளுற உணர்விருக்கு. அதாலதான் இந்தச் சனங்கள் போராடேக்க தங்களுக்காண்டி மட்டுமில்லாமல், தங்களைப் போலஇருக்கிற எல்லாச் சனங்களுக்காண்டியும் போராடுவினம். தாங்கள் சார்ந்திருக்கிற –வர்க்கம் என்டால் பேசுவியள்– நிலையின்படிதான் ஒவ்வொருத்தற்றை உணர்வும் செயற்பாடும் இருக்குது. இப்ப மாணவரை எடுத்துப் பார். மாணவர்களின் மரணமெண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையொண்டு தூண்டில்லயோ புதுமையிலயோ என்னவோ ஒருபுத்தகத்தில வந்திருந்தது. மாணவரில ஆமியைக் கைவைக்க வேண்டாமெண்டு கோரிக்கை விட்டிருந்தினம். இதையே மக்களில ஆமி கைவைக்கிறதைப் பாத்துக்கொண்டிருக்க மாட்டம் என்டு எழுதேக்க எவ்வளவு பெரிய அர்த்தமுள்ளதாயிருக்குது. ஏன் இப்பிடி எழுதேலாமப் போச்சு? பல்கலைக்கழக ஒன்றியம் சாந்திருக்கிற நிலைதான். ஒவ்வொருத்தரும் தங்கட வர்க்க குணம்சத்துக்கேத்த மாதிரித்தான் போராடுவினம். இதாலதான் இப்பிடியான வர்க்கப்பிரிவுகள் இல்லாத சமுதாயத்திற்காகப் போராடக் கூடிய உழைக்கும் மக்களை போராட்டத்துக்கு முதன்மைப்படுத்துறம்"

"சாடையா விளங்கிற மாதிரியும் இருக்குது. சிக்கலாக் கிடக்கிற மாதிரியும் தெரியுது" என்று யோகேஸ் இழுத்தான்.

(தொடர்ச்சி 27ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதருக்காய் பாடுவோம்

= சத்தியன்

பொங்கி வரும்
ஆகாய கங்கை,
புஸ்பித்த மலர்கள்,
வெண்பஞ்சு மேகத்தில்
ஊர்வலங்கள்.

ஓ... கனவுகளில்
தேர் ஓடும் கவிஞர்களே
கொஞ்சம்
மனிதரைப் பாருங்கள்.

நாளைய
உயிர்ச் சுவட்டிற்காய்
இன்றே
நசிந்துபோன எலும்புக் கூடுகள்.

தனிச்சொத்துடமை
பட்டயத்திற்காய்
கை கால் கட்டி, கண்பொத்தி
மனம் சிதைந்து
கற்புச் சிறைக்குள்
இம்சைப்படும் பெண்ணடிமைகள்.

மணிக்கட்டு முட்களின்
இயக்கமாய்
வெள்ளாட்டு
மந்தைகளாய்
வயல்களில், சேரிகளில்
தெரு ஓரத்தில்
நசிவு அடையும்
உழைப்போர் கூட்டம்

இவர்களின் விடிவுக்காய்
பாரெங்கும் புரட்சிக்கொடி
ஏந்திப் பாடுவோம்.
உழைப்பவர்
கூட்டத்தோடு
ஒன்று கலப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "இலங்கைத் தமிழ் மக்களின் கரங்கள் தென்னிலங்கை மக்களின் கரங்களுடனும் இந்திய மக்களின் கரங்களுடனும் இணைய வேண்டும்..."



*வண. பிதா. சிங்கராயருடன் இலங்கை–இந்திய மக்கள் நட்புறவுக் கழகம் நடத்திய நேர்காணல்:*

கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள்.

கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள் எண்ணற்ற பெரும் முதலாளிகளை உருவாக்கி வைத்திருக்கிறதே ஒழிய துன்பப்படும் மனிதருக்கு எதுவும் செய்ததாக இல்லை. தேர்தல் காலங்களில் துன்பப்படும் மனிதருக்குச் 'சொர்க்கத்தை' தருவதாகக் கூறுகின்றார்கள். இந்தச் 'சொர்க்கத்தை" உறுதி கூறும் 'கடவுள்களை' அடுத்த தேர்தல்களில்தான் மக்கள் மீண்டும் சந்திக்கின்றார்கள். இந்தக் 'கடவுள்கள்" தமது தேர்தலுக்கு உதவிபுரிந்த முதலாளி வர்க்கத்திற்கு நன்றிக் கடன்பட்டவர்களாக, அவர்களுக்கு பூசை செய்து வருவதில் தமது நேரத்தைச் செலவு செய்துவருகின்றன.

(கடைசியாக) நடைபெற்ற தேர்தல் நிரந்தரமாகப் பதவியிலிருந்துவிட வேண்டும் எனும் நப்பாசை கொண்ட ஒருசில சுயநலவாதிகளால் நடத்தப்பட்ட ஒரு நாடகமே. குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் அந்நியக் கூலிப் படையினர் மற்றும் அவர்களுடைய அடிவருடிகளின் கொலைகள், அடாவடித் தனங்களுக்கு மத்தியிலும் மக்கள் தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒரு செய்தியை உலகுக்கு வெளியிட்டுள்ளார்கள். தேர்தலைப் புறக்கணித்ததின் மூலம், ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணைபோனவர்களைத் தூக்கியெறிந்ததன் மூலம் தமது விடுதலையுணர்வை மக்கள் பகிரங்கமாக உலகிற்கு காட்டியுள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களுக்கு வழங்கப்பட்ட சின்னத்தைத் தேர்வு செய்துகொண்டு, ஊழல் மோசடியாலும், 'அமைதி காப்போரின்' ஆசீர்வாதத்துடனும் ஒருசில வாக்குகளைப் பலவந்தமாகத் தேடிக் கொண்டார்கள். அப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டியிருந்தும் கூட 'தமிழர்களை "ஒற்றுமைப்படுத்த' எனக் கூறிக்கொண்டுவந்த கூட்டணியின் செயலாளர்நாயகம் மக்களால் தூக்கியெறியப்பட்டது சிறப்பம்சமாகும்.

<u>இந்திய - இலங்கை ஒப்பந்தம்</u>

இலங்கை - இந்தியா என்ற பேச்சுக்கே இங்கே இடமில்லை. இது தத்தமது ஆட்சியை நிலைநிறுத்தவிரும்பிய ஜே.ஆர்-ராஜீவ் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட திடீர் காதல் கடிதமேயன்றி வேறல்ல. இதில் தமிழ் மக்கள் விடயம் என்பது வெறும் கண்துடைப்பே.

கைச்சாத்திட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியும் சிறைக்கைதிகள் சிறையில் இன்னும் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பதும், 'வெலி ஓயா "சிங்களக் குடியேற்றத்திட்டத்தை அமுல்படுத்துவதுமா இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் இலட்சணங்கள்?

ஒப்பந்தத்துக்கு உட்பட்ட தமிழ்மொழி அமுலாக்கல், விடுவிக்கப்பட்ட சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு, அமைக்கப்பட்ட மாகாணசபையின் அதிகாரங்கள், நிரந்தரமற்ற வடக்கு-கிழக்கு இணைப்பு இவை பற்றி ஆக்கபூர்வமாக எதுவுமே நடைபெறவில்லை.

அமுல்படுத்தப்பட்டவை என்று கூறினால் மாகாணசபை உறுப்பினருக்கு ஊதியமும், மேலதிக வசதிகள் வழங்கப்பட்டமையும், 1970 களில் தமிழ் விடுதலைப் போராளி ஒருவரால் இனவெறி அரசின் கொடி எரிக்கப்பட்ட அதே இடத்தில் (திருகோணமலையில்) வடக்கு, கிழக்கு மாகாணசபை முதலமைச்சரைக் கொண்டு அதே கொடியை ஏற்றி வைத்தமையும் ஒப்பந்தத்திற்குப்பின் தமிழர் பிரச்சினையில் நடைபெற்ற "சாதனைகள்" ஆகும்.

<u>இந்திய ஆக்கிரமிப்புப் படை</u>

ராஜீவ் கும்பலின் நலன்காக்க அனுப்பப்பட்ட அப்பாவி ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் எங்கள் மண்ணில் பலிக்கடாக்களாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய அமைதிப்படை சிப்பாய்கள் இராணுவ ரீதியில் காட்டுமிராண்டித்தனமான ஒரு படையாக மட்டும் வளர்க்கப்பட்டதால் அவர்கள் இயற்கையாகவே எங்கள் மண்ணில் நடந்து கொள்ளும் விதத்தில் எங்கள் மக்கள் மத்தியில், குறிப்பாக சின்னஞ் சிறார்களிலிருந்து இளைஞர்கள்வரை சுதந்திரவேட்கை பல மடங்கு அதிகரித்தமைக்காக எங்கள் தமிழினம் என்றென்றும் அவர்களுக்கு கடமைப்பாடுடையது. எது எவ்வாறெனினும் ராஜீவ் கும்பலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எங்கள் மக்களிடையே இந்திய மக்களுக்கெதிரான உணர்வாக மாறிவிடக் கூடாது என்பதே எமது அபிலாசையாகும்.


www.tamilarangam.net

**இலங்கைத் தமிழர் போராட்டத்தின் இன்றைய நிலை, அதன் வெற்றிக்கான பாதை**

தமிழ், சிங்கள முத்த தலைவர்கள் தமது ஆட்சி நலன் கருதி இனவாதத்தை வளர்த்துவிட்டு தமிழ், சிங்கள மக்களைப் பிளவுபடுத்தினர். இன்று தமிழ் மக்கள் பேரினவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இப்போராட்டம் இன்று தேசிய இனப் போராட்டமாக மட்டுமன்றி அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஓர் தேசியப் போராட்டமாகவும் பரிணமித்துவிட்டது. இரு நாடுகளின் படைக்கு எதிராக எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்க, எமது இளைஞர்கள் சிந்தும் இரத்தத்தையும், தியாகத்தையும் வரலாறு என்றுமே மறக்காது. ஆனால் இப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமானால் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் துன்பப்படும் மக்களுடனும், இந்தியாவிலுள்ள துன்பப்படும் மக்களுடனும் இணைந்து போராட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

(இந் நேர்காணல் இந்தியாவிலிருந்து வெளிவரும் 'கேடயம்' என்ற சஞ்சிகையிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

---




08.08.89 (வீரகேசரி)

ஈரோஸ் எம்.பி களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று நவீனரக துப்பாக்கிகளும், மெய்ப்பாதுகாவலர்களும், ஈ.பி.ஆர்.எல். எவ்வுக்கும் வழங்கப்படுமென பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்ததையடுத்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் மீண்டும் பாராளுமன்றம் செல்வர்.

வல்வெட்டித்துறையில் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக 40 வீடுகள், 20க்கும் மேற்பட்ட கடைகள் எரிக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் 43 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடையாளம் காணப்படாத நிலையில் எரிபாடுகளிடையே காணப்பட்ட சடலங்களை அப்பகுதி மக்கள் பொது இடங்களில் வைத்து எரித்தனர். வித்தனை கப்பல் கட்டும் தொழிற்சாலையிலும், வல்வை பெற்றோல் நிலையம் அருகிலும் தீருவிலில் உள்ள வீடு ஒன்றிலும் அடையாளம் காணப்படாத பல சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

"வடக்கு, கிழக்கில் விரைவில் சமாதானக் குழு ஏற்படுத்தப்பட இருக்கிறது. இதற்கு அமைச்சர் ஒருவரே தலைவராக இருப்பார். இந்தச் சமாதானக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப்புலிகள், ஈரோஸ், புளொட், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய அமைப்புகள் இடம்பெறுகின்றன. மக்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டு வரும் 6,700 பேரைக்கொண்ட மக்கள் தொண்டர்படையில் ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களிலிருந்து 1,800 பேர் சேர்க்கப்பட்டு அது தற்போது செயற்படுகிறது. மீதி எண்ணிக்கை விடுதலைப்புலிகள், முஸ்லீம் காங்கிரஸ், புளொட், ஈரோஸ், என்பவற்றிலிருந்து எடுக்கப்படும்." — பாதுகாப்பு அமைச்சர்

கண்டிப் பிரதேசத்தில் 3 சடலங்கள் மீட்கப்பட்டன.

12.08.89 (வீரகேசரி)

கடந்த 2 வருடங்களில் 1,156 கொலைகள் இடம்பெற்றுள்ளன.

தோட்டப் பகுதியில் ராஜா என்பவரும் இன்னொருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

"பேச்சுவார்த்தைக்கென அரசாங்கத்தினால் அழைக்கப்படுவதற்கான தகுதியாக, தராதரமாக ஆயுதமேந்துதல் கருதப்படுமேயானால் முஸ்லீம் இளைஞர்களும் ஆயுதமேந்தத் தயங்க மாட்டார்கள்" — பாராளுமன்றத்தில் அஷ்ரப்

13.08.89 (வீரகேசரி)

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது காணாமல் போன 58பேரில் 20பேர் இந்தியப்படையினரின் காவலில் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏனைய 38பேருக்கும் என்ன நடந்தது என்பதை அறியும் பொருட்டு அவர்களின் உறவினர்கள் பிரஜைகள் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

தென்னிலங்கையில் 24மணி நேரத்தில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்

14.08.89 (வீரகேசரி)

முள்ளியவளையில் இடம்பெற்ற மோதலில் வி கமலநாதன் என்பவர் உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பில் இடம்பெற்ற மோதலில் தவமணி என்பவரும் இன்னொருவரும் கொல்லப்பட்டனர்.

எம்பிலிப்பிட்டியில் சீருடையில் வந்தோரால் நடத்தப்பட்ட தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். 2 வீடுகள் எரிக்கப்பட்டன.

லக்கல பகுதியில் 9பேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டு மரத்தில் தொங்கவிடப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவுப் பகுதியில் இந்திய இராணுவத்துடனான தாக்குதலில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தினேஷ் உட்பட இருவர் கொல்லப்பட்டனர்.

15.08.89 (வீரகேசரி)

கைதான 2 ஊழியர்களை விடுவிக்கக் கோரி கொழும்பு பெரியாஸ்பத்திரியி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல் கடமையாற்றும் டொக்ரர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் முதலான சகல தரப்பினரும் 11.08.89முதல் வேலையைப் பகிஷ்கரித்து வருகின்றனர். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் 18 பேர் மரணமடைந்துள்ளனர். ஏனைய நோயாளர்கள் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இரத்தினபுரி வெல்லோபிட்டிய அரச பெருந்தோட்டத்தைச் சேர்ந்த தோட்ட லயங்கள் கடந்த 25,30 வருட காலமாக திருத்தப்படவில்லையெனவும் மாட்டுத் தொழுவங்கள் போன்றே அவை இருப்பதாகவும் தோட்டத்தொழிலாளர்கள் புகார் செய்துள்ளனர்.

15.07.89 (டெய்லி நியூஸ்)

த.வி.கூவைச் சேர்ந்த அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைச் சுட்டுக் கொன்றது எல்.ரி.ரி.ஈ யினரே என மரணவிசாரணைகளின் போது சம்பவத்தை நேரில் கண்ட இரு சாட்சிகள்தெரிவித்தனர். இரண்டாவது சாட்சியான சரோஜினி யோகேஸ்வரன் தனது சாட்சியத்தில் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களான வாசு, அலோசியஸ் ஆகியோர் தங்களைச் சந்திக்க வருவதாக கணவர் கூறியதாகக் குறிப்பிட்டரார்.

அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும்போவதற்காக பிலிப்பைன்சுக்கூடாகப் பிரயாணம் செய்த 15 தமிழர்கள் மணிலாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16.07.89 (சன்டே ஒப்சேவர்)

சௌதிர என்ற நிருபர் கொழும்பில் 5நட்சத்திர கொற்றேலில் தங்கியிருக்கும் எல்.ரி.ரி.ஈயைச் சேர்ந்த அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது பாலசிங்கம் தெரிவித்த கருத்துகளாவன:"யார் இப்போது ஈழம் கேட்கிறார்கள்?இந்திய ஆதரவான ஆயுதமேந்திய குழுக்கள் மட்டுமே ஈழம் கேட்கின்றன. நாங்கள் ஆயுதத்தை வைத்திருப்பது பற்றியோ, ஒப்படைப்பது பற்றியோ இலங்கை அரசுடன் மட்டுந்தான் கதைப்போம். பிரேமதாசாதான் இலங்கையின் ஜனாதிபதி. அவர்தான் எங்களுடைய ஜனாதிபதி. நாங்கள் அவரில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம். இலங்கையில் அமைதியைக் கொண்டுவரவும், இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்தவும் பிரேமதாச உறுதியாக இருக்கிறார். பிரேமதாச நிச்சயமாகவும், நம்பிக்கையாகவும் தமிழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பார்".

17.08.89 (வீரகேசரி)

கல்முனையில் புஷ்பா எனப்படும்மகேந்திரன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறையில் ராஜவேல், சின்னக்கிளி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

18.08.89 (வீரகேசரி)

48மணி நேரத்தில் 834பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 10 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் நடைபெறவிருந்த பயிலுநர் ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் திடீர் ரத்துச்செ

www.tamilarangam.net

யப்பட்டன. பரீட்சை மண்டபங்களுக்குள் புகுந்த சிலர் பரீட்சைக்குரிய ஆவணங்களை அபகரித்து வெளியே எடுத்துச்சென்று எரித்தனர். 'மத்திய அரசு வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் பின்னிற்கிறது. அதனால் இந்த நேர்முகப் பரீட்சையைத் தடைசெய்கிறோம் என வடக்கு, கிழக்கு மாகாணசபையின் அரசியல் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் ஓகஸ்ட் 2ஆம்திகதி இந்தியத் துருப்புகள் 70க்கும் அதிகமான குடிமக்களை கொலை செய்துள்ளதுடன், 100பேரைக் காயப்படுத்தியதாகவும், 1987 ஒக்ரோபர் இந்தியப்படைகள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது முதல் இதுவரை 6,000 அப்பாவி குடிமக்கள் கொல்லப்பட்டதாகவும்ஜ.நா உபகுழுவிடம் புலிகள் தெரிவித்துள்ளனர்.

19.08.89 (வீரகேசரி)

கட்டுகஸ்தொடவில் 7 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

21.08 89 (வீரகேசரி)

பொலிசார் தமது பதவிகளை உடனே ராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும், மீறினால் அவர்களது குடும்பங்கள் அழிக்கப்படுமென்றும் ஜே.வி.பி அறிவித்துள்ளது

ஜே.வி பி எனச் சந்தேகிக்கப்படுவோர்மீது பொலிசார் கடும் நடவடிக்கை எடுக்க இருக்கின்றனர். ஜே.வி.பியுடன் தொடர்புடையவர்கள், அவர்களுக்குப்பாதுகாப்பு வழங்குவோருக்கு மரண தண்டனை வழங்கப்படும்.

களுத்துறையில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஐவர் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர்.

21.07.89 (டெய்லி நியூஸ்)

21.06.89முதல் 15.07.89வரை வடக்கு, கிழக்கில் 69கொலைகள் உட்பட 97' வன்செயல்கள் நிகழ்ந்துள்ளன. ஏனைய பகுதிகளில் 472 கொலைகள் உட்பட 1,088 வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன.

23.08.89 (வீரகேசரி)

மாத்தறை மாவட்டத்தில் 7பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பெலியத்தையில் சடங்கு வைபவமொன்று நடந்துகொண்டிருந்தபோது அங்குவந்த இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இரவுபகலாக செல் தாக்குதல் நடைபெறுகிறது. குமுழமுனை இந்திய இராணுவமுகாமுக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளனர். முள்ளியவளையில் புதிதாக இந்திய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம், பாஸ்கரன் ஆகியோர் விறகுபொறுக்கச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

24.08.89 (வீரகேசரி)

"மிக விரைவில் எமது நாட்டில் பிச்சைக்காரர்களிடமிருந்தும் அரசு வரி அறவிடும் நிலைமை ஏற்பட்டாலும் விய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்பதற்கில்லை" - மேல்மாகாணசபை உறுப்பினர்.

நிந்தவூரில் வைத்து ஆயுதபாணிகளால் கடத்தப்பட்ட நஸார் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

ஆனைக்கோட்டைக்கு அருகே, உயரப்புலம் பகுதியில் அடைக்கலமுத்து என்பவரும் அவரது மகளான அருள்ரூபா என்பவரும் அவர்கள் வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

திக்குவெலப் பகுதியில் 3பொதுமக்கள் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் உள்ள சர்வதேச நாணயசபை அதிகாரிகள் திறைசேரி, மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை இரகசியமான முறையில் நடத்தி உள்ளனர். இப் பேச்சுவார்த்தைகள் குறித்து எவரும் எதனையும் வெளியிடவில்லை.

மகாவலிகங்கையில் பல சடலங்கள் சாக்குகளுள் கட்டப்பட்ட நிலையில்கரையொதுங்குகின்றன.

25.08.89 (வீரகேசரி)

பயிலுநர் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு மலையக இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

நித்தம்புவையில் பொலிஸ்காரர் ஒருவரின் தாயும், அங்குணகொலவெலசவில் மாணவனும், ஆசிரியரும், எகலியகொடயில் தனியார் பஸ் நடத்துனர்கள் இருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டியவில் 6 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஜூலை 16ஆம் திகதிமுதல் ஒகஸ்ட் 15 ஆம் திகதிவரையிலான ஒருமாத காலத்தில் 841 கொலைகள் உட்பட1468 வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 24மணி நேரத்தில் 27 இனந் தெரியாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

26.08.89 (வீரகேசரி)

அங்குணகொலபெலசவில் இலங்கைப் படைகளால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றிய இருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட தினத்தில் உடன்படிக்கைக்கு எதிராகக் கண்டனக்குரல் எழுப்பி ஊர்வலம் சென்ற 143 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதைதொடர்ந்து கடந்த ஜூலை மாதம் 28, 29 ஆம் திகதிகளில் இலங்கை-இந்திய உடன்படிக்கைக்கு எதிராக ஊர்வலம் சென்ற 523பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் தினமும் கொலைகள் இடம் பெறுவதுடன் பாட்டாளி, தொழிலாளி வர்க்கத்தினரின் உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. நாட்டில் தற்போது தினமும் நடைபெறும் மனிதக் கொலைகள் உட்பட பாட்டாளி மக்களுக்கெதிராக அமுல்படுத்தப்பட்டுவரும் அடக்குமுறைச் சட்டங்களுக்கு 25.08.89இற்குள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையேல் பொதுவேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் - தேசிய தொழிலாளர் போராட்ட முன்னணி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வடக்கு, கிழக்கு இளைஞர்கள் கொழும்புக்குத் தப்பியோடி வருகிறார்கள். அவர்களுக்குப் புகலிடமளிக்க பம்பலப்பிட்டியில் முகாம் அமைக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் பிரச்சாரம் நடத்தப்படுகிறது. 21, 22ஆம் திகதிகளில் இங்கிருந்து (தென்னிலங்கையிலிருந்து) 200 அகதிகள் வடக்கு, கிழக்குக்கு வந்தார்களே? அதுபற்றி யாரும் மூச்சு விடவில்லை" — பாராளுமன்றத்தில் யோகசங்கரி.

"கொலை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் இன்று கொலைசெய்வது என்பது மீன்பிடிப்பதுபோல எளிதாகிவிட்டது. யாரைக் கொலை செய்வதெனத் தீர்மானிப்பதுதான் ஒரு விவகாரம். மற்றும்படி தடையெதுவும் இல்லை. இன்றைய 'ஸ்கோர்' எவ்வளவு? நேற்றைய 'ஸ்கோர்' எவ்வளவு? என்று மரணங்களை எண்ணிக்கொண்டிருக்கிறோம் — பாராளுமன்றத்தில் வாசுதேவ

"வடக்கு, கிழக்கில் பொதுமக்கள் ஆயுதந் தாங்கிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளின் நிர்ப்பந்தம் காரணமாக பாரதூரமான பதற்ற நிலையில் வாழ்கிறார்கள். அக்கரைப்பற்றில் இடம்பெற்ற வன்செயலுக்கும், மாகாணசபை உறுப்பினர் அலி உதுமான் கொலைக்குமான முழுப் பொறுப்பையும் வடக்கு, கிழக்கு மாகாணசபையும், ஈ.என்.டி.எல்.எவ் இயக்கமுந்தான் ஏற்கவேண்டும். ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ பயங்கரவாதக் குழுக்கள் முஸ்லீம் மக்களுக்கு எதிராக இயங்குகின்றன. கொள்ளையடிக்கிறார்கள். மக்களின் நெல்வயல்களை ஆக்கிரமித்துள்ளார்கள். கப்பம் வசூலிக்கிறார்கள்" — பாராளுமன்றத்தில் அஷ்ரப்

28.08.89 (வீரகேசரி)

அநுராதபுரத்தில் 10 வீடுகள் இனந் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டன.

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், த.வி.கூ, ரெலோ, ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் உள்ள தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தில் இணைய ஈரோஸ் விருப்பம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் பகுதியில் அடையாளம் தெரியாத சில சடலங்கள் காணப்பட்டன.

09.08.89 (வீரகேசரி)

தென் பகுதியில் பல இடங்களில் எரிந்த நிலையிலான 17 சடலங்கள் மீட்கப்பட்டன.

வல்வெட்டித்துறையில் நடந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 3,000பேர் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

10.08.89 (வீரகேசரி)

கண்டி, அஸ்கிரிய கிராமத்தில் கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் பாதையோரத்தில் 5 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதேபோல் அம்பிட்டிய, அல்லவவிலும் 2 சடலங்கள் காணப்பட்டுள்ளன. மேலும் 2 சடலங்கள் மகாவலிக் கங்கைகரையில் ஒதுங்கியுள்ளன. கம்பளையில் எரிந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எனக்கொரு சந்தேகம்" என்றான் சண்முகநாதன்.

"என்ன?"

"தொழிலாளி, தொழிலாளியெண்டு நெருகச் சாகிறாய். அதென்னெண்டு தொழிலாளியள், பாட்டாளியலாலதான் எல்லா மக்களுக்குமா போராடலாமெண்டு அடிச்சுச் சொல்லுறாய்?"

"அததான் முதலே சொன்னனே. ஒவ்வொரு வர்க்கமும் தனக்கேயுரிய குணும்சத்தைக் கொண்டிருக்குமெண்டு. உழைக்கும் வர்க்கந்தான் அடிமைப்பட்டுக் கிடக்கு. அதாலதான் கொஞ்சப்பேர் மட்டும் பணக்காரராய் எல்லாச் சுகபோகத்தையும் அனுபவிச்சுக் கொண்டிருக்க கனபேர் ஒரு நேரச் சாப்பாட்டுக்கே திண்டாடுயினம். இப்பிடி அநியாயமானமுறையில சமூகப் பிரிவுகள் இருக்கிறதை மாத்தி, எல்லாரும் சமமாய் வாழுற சமூக மாற்றத்திற்காய் ஒடுக்கப்படுற பெரும்பான்மைச் சனங்களாலதான் முடியும். ஒடுக்கு முறையாளரிட்டயும், ஆளும் வர்க்கத்திட்டயும் இல்லாத மனிதம் இந்தச் சனங்களிட்ட இருக்குது. புரிந்துணர்வு இருக்குது"

"கொஞ்சம் பொறு. புரிந்துணர்வு இருக்கெண்டு சொல்லுறாய். சும்மா ஒரு உதாரணத்துக்குச் சொல்லுறன். எத்தினையோ ஸ்ரைக்குகள் நாட்டில நடக்குது. சி.ரி.பி ஸ்ரைக்கெண்டா அவங்கள் மட்டுந்தானே வேலைக்குப் போகாம நிக்கிறாங்கள். சிமென்ற் பக்ரிக்கு ஆக்கள் வேலைக்குப் போகினம் தானே? இதில புரிந்துணர்வு எங்க போட்டுது? ஒரு பகுதித் தொழிலாளற்றைக் கஷ்டத்தை மற்றப் பகுதி தொழிலாளரால ஏன் புரிஞ்சு கொள்ளேலாம போச்சு?"

"மணிக் கேள்வி" என்றான் யோகேஸ்வரன்.

"நீ சொல்லுற மாதிரித்தான் உண்மையில நடந்து கொண்டிருக்கு. காரணம் சரியான முறையில ஆரும் அரசியல் மயப்படுத்தப் படேலை. தங்களைப் பற்றின சரியானவகணிப்பீடுகளைக் கொண்டிருக்கேல. மனுசத்தன்மையும், புரிந்துணர்வும் இருந்தா மட்டும் போதாது. அவற்றை சரியானபடி வைச்சிருக்க சமூகவிஞ்ஞானத்தில தெளிவும் வேணும். இதுதான் இப்ப உள்ள கடமை. நீ யோசி பார். ஒழுங்காய் பள்ளிக்கூடத்துக்கு போய், தூக்கேலாத புத்தகங்களையெல்லாம் படிச்சு, விசயங்களை தேடிக்கொள்ள வசதியிருந்தும் சரியானதைத் தேடிக் கொள்ளாத எங்கட நிலமையளே எங்களுக்கு இப்பதான் விளங்குதெண்டா, ஒரு நேரச்சாப்பாட்டை மட்டுமே குறியா வைச்சு வேலைக்குப் போற ஒரு கூலித் தொழிலாளி சமூக விஞ்ஞானத்தைப் படிக்கிறதெங்கை? இதைப் புரிஞ்சுகொண்டு, அந்தச் சனங்களுக்குப் புரியிற மொழியில, அவையின்ரை பலத்தை, அவைக்கே உணர்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பருத்தி, அதை அவை பயன்படுத்த வேண்டிய அவசியத்தைத் தெளிவுபடுத்துறதுதான் இப்ப முற்போக்காளர் என்டு தங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறவை, சமூக, விஞ்ஞானம் படிச்சவையின்ரை கடமை"

"நாயன்மாற்றை குருபூசைக்கு கோயிலில நித்திரைகொண்டுகொண்டு பிரசங்கம் கேட்ட மாதிரிஇருக்குது" என்றான் ரவீந்திரன்.

"என்னவோ நீ எல்லாத்துக்கும் மறுமொழி சொல்லிப் போடுறாய். எனக்கென்டா உதெல்லாம்சரி வரும் போல தெரியேல்லை". யோகேஸ் சொன்னான்.

"மாற்றம் வரும் என்பதில் மாற்றமேயில்லை"

"தேவர் பிலிம்ஸ் படங்களில தொடங்கேக்கயும், முடியேக்கயும்




ஓவியத்திற்கு நன்றி: திசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யானை வந்து பிழிறுகு மாதிரி நீயும் உந்த வசனம் சொல்லுறதை நிப்பாட்டவே இல்லை" என்று சன்மு

கநாதன் சொல்ல, உதயன் சிரித்துக்கொண்டான்.

"இனியெண்டாலும் ரீ.வி.போட்டே?" ரவீந்திரன் பரிதாபமாய் கெஞ்ச, "போட்டுத் துலை" என்று காந்தன் அனுமதியளித்தான்.

மறுபடி ஆர்.ரி.எல் அலைவரிசை வந்து ரென்னிஸ் காட்டியது. கொஞ்ச நேரம் பந்தையும், நீண்ட நேரம் விளையாடிக் கொண்டிருந்த பெண்களின் கால்களையும் கமரா ரசித்துக் கொண்டிருக்க, ரவீந்திரனும் பின்னதில் ஆர்வமாயிருந்தான்.

உதயன் கொடுக்க வந்த காசைக் காந்தனிடம் கொடுத்து, மிகுதியை தருவதற்குப் பிறிதொருதவணையை வைத்தான். மேலும் கொஞ்ச நேரம் இருந்து கதைத்துவிட்டு "விடிய வேலை" என்று விடைபெற்று வெளியேறினன்.

வீட்டுக்கு வந்ததும் களைப்பாயிருந்தது. இன்று சமைக்க வேண்டாம் போல் தோன்றியது. உடுப்பை மாற்றிக்கொண்டு கட்டிலில் படுத்தான். தூக்கம் உடனே வரும் போலில்லை.

மேசைக்கு வந்து குவியலாயிருந்த புத்தகங்களுள் த. ?. மானின் திறனாய்வுக் கட்டுரைகளை எடுத்துக் கொண்டு கட்டிலுக்கு வந்து பிரித்தான். கடைசியாகப் படித்ததற்கு அடையாளமாக வைக்கப்பட்டிருந்த தம்பியின் ஏயமெயிலை வெளியே வைத்துவிட்டு ஈழத்துத் தமிழ் நாவல்களின் மொழியைத் தொடர்ந்தான்.

மறுநாள் தொழிற்சாலையில் பழையபடி கட்டாய சுறுசுறுப்பாயிருந்தான். ஏகப்பட்ட இரும்பு சமாச்சாரங்கள். தகுந்த பாதுகாப்புஉடைகள், கவசங்கள் எதுவுமில்லாமல் நெருப்பு வெக்கையிலும், இரும்புதுகள் மண்டலத்திலும் பலர் உழைத்துக் கொண்டிரு — இல்லை — உழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

யோகேஸ்வரன் சூடேறிய இரும்புகளை வெளியே அருக்கிக்கொண்டிருக்க, உதயன் வேறொரு பக்கத்தில் வர்ணம் பூசிக் கொண்டிருந்தான். எங்கும் இரும்பு இரைச்சல் நிரம்பியிருந்தது.

"என்ன இன்று சந்தோசமாயிருக்கிறாய்?" உதயன் பக்கத்தில்வேலை செய்து கொண்டிருந்த அற்றில்லா இல்கான் எனப்படும் இல்கானை விசாரித்தான்.

இல்கான் ஒரு குர்டிஸ்தானியன். உதயன் போலவே அவனும் அரசியல் தஞ்சம் கோரியிருந்தான். இதே தொழிற்சாலையில் பல வருடங்களாக முறிந்து கொண்டிருக்கிறன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மனைவி கடிதம் போட்டிருக்கிறாள். மகள் கூட அப்பாவுக்குப்படங்கள் வரைந்திருக்கிறாள்."

இல்கானின் மனைவியும் அவனுடன் மேற்கு ஜேர்மெனிக்கு தப்பித்து வரவில்லை. அப்போது அவள் குழந்தையை கர்ப்பத்தில் வைத்திருந்தாள். இல்கான் கையில் அகப்பட்டால் அவனின் தலையைச் சீவு வதற்கு துருக்கி அரசின் ஏவற் படை தயாராகவிருந்தது.

"இந்தக் குழந்தைக்காகவாவது நீங்கள் எங்காவது தப்பிப்போய்தான் ஆகவேண்டும்" என்று மனைவி தான் கட்டாயப்படுத்தி அவனை அனுப்பி வைத்தாள். அவனது நண்பர்கள் கூட "வெளிநாட்டில் நீ இருந்தால் எங்கள் காரியங்களுக்கும் பயன்படலாம்" என்று தெரிவித்திருந்தார்கள். இவற்றையெல்லாம் பல தடவைகள் உதயனிடம் சொல்லி இல்கான் கலங்கியிருக்கிறான்.

"சுகமாக இருக்கின்றார்களாமா?" என்று உதயன் சம்பிரதாயமாகக் கேட்டதும் இல்கானிடமிருந்த சந்தோசம் போய்விட்டது.

"அவர்கள் இன்னும் அகதி முகாமில்தான் இருக்கிறார்களாம். கடுங் காய்ச்சலால் மகள் வாய்விட்டு அழுதபோதும் மருந்தெடுக்க முடியாமல் மனைவி சிரமப்பட்டாளாம்."

"நீ காசனுப்புகிறாய் தானே?"

இல்கான் தனது துருக்கி நண்பனுக்கு பணத்தை அனுப்பி அவன் மூலம் தனது குடும்பத்துக்குக் கிடைக்கச் செய்வதாக ஏற்கெனவே சொல்லியிருந்தான்.

"மருந்து வாங்கக் கூடியசூழ் நிலை அங்கே இல்லை. சுகயீனத்தை க்குணப்படுத்த பணத்தைச் சாப்பிட முடியாதே"

பிறகும் கேள்விகள் கேட்டு அவனை வருத்த விரும்பாது உதயன் வேலையைத் தொடர்ந்தான்.

நாடுவிட்டு நாடு வந்த பலத் இன, மொழி பேதமின்றி, சம்பந்தமேயில்லாத யாரோ முதலாளிகள் சந்தோசமாயிருப்பதற்கு தங்கள் உடலை வருத்திக் கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் முதலாளிகளில் ஒருவர் பி. எம். வேயில் வந்து, மடிப்புக்கலையாமல் இறங்கினார். வேலை செய்து கொண்டிருந்த அனைவரையும் கூப்பிட்டார். தங்கள் பொருட்களுக்கு அவசரமாகப் பலர் விண்ணப்பித்திருப்பதாகவும், அதனால் மேலதிகப் பொருட்கள் தேவையாயிருப்பதால் இரவும் வேலை செய்யவேண்டியுள்ளது எனக் கூறினார்.

இரவு வேலை செய்பவர்களுக்கு சம்பளத்தில் சின்னத் தொகை கூடும் என்பதையும் அவர் தெரிவிக்கத் தவறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காசைக் கணக்குப் போட்டுப்பார்த்த பலர் சந்தோசப்பட்டுக்கொண்டார்கள். இரவுச் சந்தோசங்கள் பறிபோவதையிட்டு சிலர் முணுமுணுத்தும் கொண்டார்கள்.

அடுத்த வாரத்திலிருந்து எல்லோரும் இரவு வேலையைக் கட்டாயமாக மாறி மாறிச் செய்ய வேண்டும் என்றபோது இல்கான் தன்னால் முடியாதென்றான். அவனைப் புறக்கணித்து ஏனைய விபரங்களை மற்றவர்களுக்குத் தெரிவித்த முதலாளி இல்கானை தனது அறைக்கு வரும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

'மனுசி, பிள்ளையள் கஉஷ்டப்படுகுதெண்டு அழுகிறன். பிறகேன் இரவு வேலை செய்ய மாட்டனெண்டு அடம் பிடிக்கிறன்? முதலாளியும்கொதியன்.' என்று யோசித்தபடி உதயன் தனது இடத்திற்கு வந்துவேலையைத் தொடங்கினன். இரவு வேலை ஆரம்பித்தால் பகலில் செய்ய வேண்டிய சில அலுவல்களைக் கவனிக்கலாம் என்பதில் திருப்தியாயிருந்தது.

ஒரு மணித்தியாலத்தின் பின் இல்கான் கையில் பல பத்திரங்களுடன் திரும்பி வந்தான்.

"முதலாளி என்ன சொன்னன்?" உதயன் அக்கறையுடன் விசாரித்தான்.

"இப்போதிலிருந்து என்னை வேலையிலிருந்து நீக்கியாயிற்று" என்றான் இல்கான்.

"உண்மையாகவா?" உதயன் திருக்கிட்டான். பத்து வருடங்களுக்கு மேலாகத் தூசியைத் தின்றுகொண்டு, தன்னை இந்தத் தொழிற்சாலையில் நோக வைத்துக் கொண்டிருந்தவனையா இப்படித் திடீரென்றுவேலையைவிட்டு நீக்கியிருக்கிறார்கள் என்பதில் ஆத்திரம் வந்தது.

"என்ன காரணம்?" என்று கேட்டான்.

"இரவு வேலை கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்றான். முடியாதென்றேன். நான் மட்டும் செய்யாமலிருந்தால் பின்னர் மற்றவர்களும் மறுத்து விடுவார்கள் என்று சொன்னன். அதுபற்றி எனக்கு கவலையில்லையென்றேன். இரவு வேலைக்குச் சம்மதமில்லையாயின் வேலையைவிட்டு நீக்கிவிடப் போவதாகச் சொன்னன். நீக்கிவிட்டான்" இல்கான் சலனமில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தான்.

"உனக்குப் பைத்தியமா? வேலையைவிட்டு நீக்கப் போவதாகச் சொன்ன பின்பும் ஏன் முரண்டு பிடித்தாய்? அவன் முதலாளி. எங்களது கஉஷ்டம் அவனுக்குப் புரிய வேண்டிய அவசியமில்லை. அவனைப் பொறுத்தவரை இருப்பில் பணம் சேர்ந்தால் போதும். நீ உனது குடும்பத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?" தன்னுடன் மனம்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டுப் பழகும் நண்பன் என்ற முறையில் உதயன் கண்டித்தான்.

"எனது குடும்பத்தைப் பற்றி மட்டுமல்ல, எனது மக்களைப் பற்றியும் சிந்தித்ததால்தான் வேலையை இழந்திருக்கிறேன்" என்றான் இல்கான்.

உதயன் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்தான்.

"இரவுகள் எனக்கு முக்கியமானவை. அவற்றை இந்த வேலைக்காக என்னால் இழக்க முடியாது. நீ பாதைகளில் நடந்துபோகும் போது பார்த்திருப்பாய் குர்டிஸ்தான் மக்கள் பற்றிய சுவரொட்டிகளை. வேறு பல பிரசுரங்களையும் உனக்கு நான் அவ்வப்போது காட்டியிருக்கிறேன். இவற்றையும், இன்னும்பல வற்றையும் எங்கள் மக்களுக்காகச் செய்வதற்கு எனக்கும், நண்பர்களுக்கும் இரவுகள் தேவைப்படுகின்றன. எனது குடும்பத்திற்காக நான் அகதியாக இங்கு வந்திருக்கலாம். ஆனால் ஏனைய மக்களையும் நேசிக்கும் மனிதனாகவே எனது இருப்பை இங்கு அமைத்துக்கொள்ள விரும்புகிறேன்— இங்கு இருக்கும்வரையும்" இல்கான் பத்திரங்களை நிதானமாக மடித்தான்.

உதயன் திகைத்துப் போயிருந்தான். இப்படியொன்றை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. படித்த ஏட்டுச் சுரைக்காய்கள் அவன் முன்னால் கறியாகிக் கொண்டிருந்தன.

"நீ ஒரு வெளிநாட்டு அகதி. இந்த நாட்டில் ஒரு அகதி வேலை தேடிக் கொள்வது சுலபமல்ல. உனக்கு இன்னொரு வேலை எளிதில் கிடைத்துவிடும் என்று நம்புகிறாயா?"

"நம்பிக்கையுடன் தேடுவேன். கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. இங்கே பெரும்பான்மையான அகதிகள் வேலையில்லாமல்தான் இருக்கிறார்கள்"

"தொழிற்சங்கத்திடம் போய் இப்படி வேலையை விட்டு நீக்கியது அக்கிரமம் என்று கதைத்துப் பார்ப்போம். இங்குள்ள சக தொழிலாளர்களுடன் கூடிப்பேசி எல்லோருமாக இதற்கெதிராக ஏதாவது செய்யலாம்." என்றான் உதயன் எதிர்பார்ப்புடன்.

"நீ வீண் நம்பிக்கை வைக்கிறாய். இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் யாரும் தொழிற்சங்கத்தில் இல்லை. இப்போது அவர்களிடம் போனால் அங்கத்தவரா? இல்லையா? ஏன் இல்லை? என்று தான் கேட்பார்கள். தவிரவும் இப்போதெல்லாம் முதலாளிகளுடன் சிநேகமாயிருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். ஒன்றாகச் சேர்ந்து கதைப்பதற்கும் இங்கு வேலை செய்பவர்கள் முன்வர மாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ பிரச்சினைகள். அவர்களுக்கு நான் ஒரு முட்டாள். முட்டாளுக்காக யாரும் போராடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதில்லே"சொல்லிவிட்டு இல்கான் உடை மாற்றப் போய்விட்டான்.

உதயன் விழுந்தடித்துக்கொண்டு மிசயெலிடம் போய் விசயத்தை தெரிவித்தான்.இல்கானுக்கு தலையில் பிழையென்பதாக அவன் சைகை செய்து காட்டிவிட்டு தொடர்ந்து நெருப்புப் பிடித்தான்.

உதயன் யோகேசைத் தேடிப்பிடித்தான்.

"நாங்கள் ஏதேன் செய்யலாந்தான்.ஆறு பத்து வருசமாய் வேல செய்தவனேயே முதலாளிவேலையைவிட்டு நிப்பாட்டிப் போட்டானென்டால் எங்களை நிப்பாட்டுறது பெரிய காரியமில்லே. உனக்கே தெரியும் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த வேலே எடுத்தனுங்கள் என்டு.இதையும் விட்டிட்டு ரோட்டில நிக்கச் சொல்லுறியே" என்றான்கடைசியில் யோகேஸ்.

உதயன் பழையபடி தனதிடத்திற்கு வந்துவிட்டான்.தங்களதுகையாலாகதனத்தைப் பற்றி நினைக்க நினைக்க எரிச்சல் பற்றிக் கொண்டுவந்தது. 'சீ என்ன சனங்கள்.கூட வேலே செய்யிற ஒருதனுக்கு அநியாயம் நடக்குது.பாத்துக் கொண்டிருக்கிறுங்கள்'

திடீரென எரிச்சல் தணிந்தது.

'மற்றவையளே ஏன் குறை சொல்லுவான்.நான் என்ன செய்து போட்டன்?எல்லாருக்கும் விசயத்தைச் சொல்லிப் போட்டு விட்டிட்டன்.விசயத்தை தெளிவாய் விளங்கப்படுத்தி, இந்த அநியாயம் நாளேக்கு எங்களுக்கும் நடக்கும்.நாங்கள்தான் இதற்கெதிரா உறுதியாய் போராடவேணும் என்டு ஏன் சொல்லேலாமப் போச்சு?முதலாளியோட போய் ஏன் கதைக்கேலாமப்போச்சு?

ஏன்?

யோகேஸ் சொன்ன மாதிரி எங்களேயும் வேலேயைவிட்டு நிப்பாட்டிப் போடுவங்கள் என்ட பயந்தானே?நிப்பாட்டட்டுமன்.அநியாயத்துக்கெதிராய் நிண்ட திருப்தியாவது கிடைக்கும்.ஆறு ...

இயக்கத்தில இருந்து பிரிஞ்சு வந்து, இப்ப இயக்கத்திட்டயும், ஆமியிட்டயும் இருந்து உயிர் தப்பத் துடிக்கிற தம்பியை வெளிநாட்டுக்குக்கூப்பிடுறதுக்கே பத்தாயிரத்துக்குமேலே கடன் பட்டாச்சு.ஏஜென்சிபேக்காட்டுறதாலே அவனே இன்னும் எடுத்தபாடில்லே.ஆள் வந்து சேருமட்டும் இன்னும் எவ்வளவு செலவாகுமோ?

இந்த வேலேயைவிட்டா பிறகு வேலே எடுத்த மாதிரித்தான். வேலேயில்லாட்டி கடன்அடைக்கிறது என்னென்டு?காசனுப்புறது என்னண்டு?

உதயன் குழம்பிப் போனுன். வேலே முடிந்து அறைக்கு வந்து குளித்துச் சாப்பிட்டபோதும் அன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றைய சம்பவம் விலகவில்லே.

'காந்தன் வீட்டில சண்முகநதன், யோகேஸ் மற்றவங்களோட தொழிலாளியளேப் பற்றி நான் கதைச்சதெல்லாம் எவ்வளவு பொய்! ஒரு இடத்தில ஸ்ரைக் நடக்கயிக்க வேற இடத்தில வேலேக்குப் போறதுக்குக் காரணம் தொழிலாளியளின்ரை அரசியல் வறுமை தான் காரணமெண்டன். இப்ப எனக்கு?

என்ரை தம்பிக்கு உயிராபத்து எண்டது மட்டுந்தானே எனக்குத் தெரியுது. ஒரு சக தொழிலாளிக்கு அநியாயம் நடக்கிறது ஏன் முக்கியமாய் படேல? இல்காணும் ஒரு மனுசன்தானே? அவனுக்கேன் தன்னே நம்பியிருக்கிற மனுசி, பிள்ளேயள் முக்கியமாய்ப் படேல?

அப்பிடியெண்டா மற்றவைகளோட கதைக்க மட்டுந்தான் நான் பொய் முகம் பொருத்துறன். இல்கான் வேலேயால நிப்பாட்டுப் பட்டு றோட்டுக்குப் போகேக்கபாத்துக்கொண்டிருந்த முகந்தான் என்ரை உண்மையான முகம்.

பிறகேன் அப்பப்ப பொய்முகத்தோட மற்றவைக்கு தத்துவங்களேச் சொல்லிக் கொண்டிருப்பான்? பேசாம என்ரை பாட்டில புத்தகங்களே வாச்சுக் கொண்டிருப்பம்.

ஏன் அப்பிடியிருக்க வேணும்? அதால என்ன நன்மை? நான்தான் கதைக்கிறதுக்குச் சம்பந்தமில்லாம இருக்கிறன். இல்கான் அப்பிடியில்லேயே. அவனுந் தொழிலாளிதான். நானுந் தொழிலாளி. ஆக பிழை என்னில தானேயொழிய தத்துவங்களில இல்லே. பிழையில்லாத தத்துவங்களே மற்றவைக்கு விளங்கப்படுத்தி ஏன் அவையை நான் உணர்மையூட்டக் கூடாது? இப்போதைக்கு நான் நானுயிருந்தாலும் மற்றவை இல்காணுகக் கூடாதே?

மற்றவைக்கு என்னேப் பற்றி வேற முகம் காட்டுறது ஒரு வகையில ஏமாற்றுத் துரோகமெண்டாலும் இன்னொரு பக்கத்தில நன்மையுமில்லாமலில்லே.'

உதயன் உடுப்பு மாற்றிக் கொண்டு பஸ் நிலேயத்திற்கு வந்தான். நாற்பத்தியேழாம் இலக்க பஸ் வர ஏறினுன்.

காந்தன் வீட்டுக்குப் போக வேண்டும். அங்கே சண்முகநாதனும், யோகேஸ்வரனும், ரவீந்திரனும் இருப்பார்கள்.

கதைக்கலாம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# „CRY OF ASIA"





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய, பசுபிக் மக்கள் கலாச்சார ஒருங்கிணைப்புக் குழு (AC-PC) 'கிறை ஒவ் ஏசியா' எனும் இசை— நர்ட்டிய—நாடக நிகழ்ச்சியுடன் உலக சுற்றுப் பயணத்தைமேற்கொண்டு இப்போது மேற்கு ஜேர்மனிக்கு வந்துள்ளனர். பல நகரங்ளிலும் மேடையேறிய இந்நிகழ்ச்சி மேற்கு ஜேர்மனியில் இறுதியாக இம்மதாதம் 21, 22ஆம் திகதிகளில் மேற்கு பேர்லினில் மேடையேறுகிறது. அதன் பின் ஒஸ்ரியா, கொலண்ட் நாடுகளில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த இசை—நாட்டிய—நாடகத்தில் பங்குபற்றும் கலைஞர்கள் பிலிப்பைன்ஸ், தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை, ஒஅரியோஆ, பாகிஸ்தான், இந்தியா, யப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அனைவரினதும் கூட்டு முயற்சியில் இந்நிகழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பொதுமொழியென்று ஏதும் இல்லை. ஒவ்வொரு கலைஞரும் தனது மொழியிலேயே தனக்குரிய பகுதியைக் கதைக்கிறார் அல்லது பாடுகிறார். உதாரணமாக இலங்கைக் கலைஞர் தமிழிலும் தென்கொரியக் கலைஞர் தனது மொழியிலுமே உரையாடுகிறார்கள்.

ஒவ்வொரு கலைஞரும் தங்களுடைய கலாச்சாரப்படி உடையணிந்து, தங்களது பாரம்பரிய ஆட்டங்களையே ஆடி, பாரம்பரிய இசையையே இசைக்கிறார்கள்.

இந் நிகழ்ச்சியில் 3 பாத்திரங்களுக்கு மட்டுமே பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இறை — பூசாரி
மிறேகாவா — பலம்வாய்ந்த தீய பறவை.
தாறே — மண்ணிலிருக்கும் நல்ல தேவன்.
சுவாறே — கிராமத்து இளம்பெண்.

ஏனைய பாத்திரங்கள் பெயரிடப்படாமல் சமூகமாகவும், பறவைகளாகவும், தீய ஆவிகளாகவும் பங்காற்றுகிறார்கள்.

காட்சி 1:

மேடையின் பின்பகுதியில், மத்தியிலே ஒரு திரைச்சீலை தொங்கவிடப்பட்டுள்ளது. அதில் பிரம்மாண்டதாக பிரகாசிக்கும் சூரியன் வரையப்பட்டுள்ளது. மேடையின் இரு மருங்கிலும் ஆசிய நாட்டு வாத்தியங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அரங்க விளக்குகள் அணைந்ததும், வெளியே இருந்து கணிரென்ற குரல் ஒலிக்கிறது. "சே ஆ.. சே ஆ" (பறவைகளே, பறவைகளே) என்று பாடியபடி வெள்ளை அங்கி அணிந்த ஒருவர் கையில் மெழுகு திரியுடன் முன்னே வருகிறார். அவர் பின்னே வ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிசையாக தங்கள் கலாச்சார உடைகளை அணிந்திருந்த கலைஞர்கள் மௌனமாக கையில் காகித அட்டைகளைத் தாங்கியபடி ஊர்வலமாகவருகிறார்கள்.

மேடையில் ஏறியதும் வெள்ளை அங்கி அணிந்திருந்தவர் மெழுகுதிரியை மத்தியில், தரையிலே வைத்துவிட்டுத் தொடர்ந்து பாடுகிறார். அவர் பின்னே வந்தவர்கள் மேடையில் ஏறி நீளப்பாட்டுக்கு வரிசையாக நின்று கொள்கிறார்கள். இப்போது அவர்கள் கையில் வைத்திருந்த அட்டைகள் துல்லியமாகத் தெரிந்தன. ஒவ்வொரு நாட்டவர்களும் வைத்திருந்த அட்டைகளில் அவர்களின் நாடுகளின் பெயர்கள் குறிக்கப்பட்டு, அந்தந்த நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவது ஓவியங்களாக வரையப்பட்டிருந்தது. இடமிருந்து வலமாக ஒஅறிலோ, பாகிஸ்தான், இந்தோனேசியா, யப்பான், பிலிப்பைன்ஸ், சிறிலங்கா, இந்தியா, தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து நாட்டவர்கள் அட்டைகளை வைத்திருந்தார்கள்.

வெள்ளை அங்கியுடன் நின்றவர் கையில் வைத்திருந்த காகிதத்துண்டை வாசிக்கிறார். ஆசிய, பசுபிக் நாடுகளின் பெயர்கள் வாசிக்கப்படுகின்றன. பின் அக்கடுதாசியை எரிந்துகொண்டிருந்த மெழுகுதிரியில் பிடித்து தீயிட்டு, சாம்பலாக்கி, காற்றில் பறக்கவிடுகிறார். அவர் பாட மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள். பிறகு மண்டியிட்டு வணக்கம் தெரிவிக்கிறார்கள்.

காட்சி 2:

மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒருவர் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டு பாட, மறுபக்கத்தில் ஒருவர் புல்லாங்குழல் இசைக்கிறார். தேவதையொன்று வந்து சூரியனின் முன் நடனமாடுகிறது.

காட்சி 3:

ஆண்கள் குழாமொன்று அம்பு, வில்லு ஈட்டிகளுடன் வந்து வேட்டையாடுகிறது. அவர்கள் ஆடிப்பாடி சந்தோசமாக வேட்டையாடுகிறார்கள். சில நிமிடங்களின் பின் பெண்கள் குழாம் வந்து வயலில் வேலை செய்கிறது.

அவர்களும் தங்களுக்குள் கதைத்துச் சிரித்து உற்சாகமாக வேலை செய்கிறார்கள்.

வேட்டையாடிக் கொண்டிருந்த ஆண்கள் குழுவினர் ஒரு கொழுத்த வேட்டையைப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அதைச் சுமந்துவந்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த தங்கள் மனைவியருக்கு காட்டிச் சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது வெளியேயிருந்து கூச்சல் வருகிறது.

ஆண்கள் குழுவில் ஒருவர் முன்னுக்கு வந்து "பூசாரியார் இதோ வாறார். படு கிழவன். எங்களுக்கு அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகிடிக்காற பூசாரியார். ஊரில எல்லாக் காரியங்களுக்கும் வருவார்" என்று சொல்லிச் சிரிக்கிறார்.

எல்லோரும் சிரித்தபடி தெருவைப் பார்க்க, வயதுபோன பூசாரியார் நொண்டியபடி, கைத்தடியை ஊன்றிக்கொண்டு வருகிறார். அவர் தனக்குத்தானே பெரிதாககதைத்தபடி நடந்து வருகிறார்.

அவரின் பின்னால் கையாள், வளைந்து, நெளிந்தபடி பெரிய தட்டொன்றைச் சுமந்துகொண்டு வருகிறான்.

ஆண்கள் குழுக்கள் தங்களின் வேட்டையைப் பூசாரிக்கு காட்டிச் சந்தோசப்பட, பூசாரி தனது கையாளுக்கு கட்டளையிட, அவன் தான் கொண்டுவந்த தட்டில் அவர்களின் வேட்டையின் பெரும் பகுதியை எடுத்துப் போட்டுக் கொள்கிறான். பூசாரி அவர்களுடன் கதைத்துச் சிரித்து அவர்களுடைய வேட்டைக்குப் பாராட்டிவிட்டு திரும்பிப் போகிறார்.

அவரின் கையாள் வயலில்வேலை செய்த பெண்களிடமும் ஒரு பங்கை வாங்கித் தட்டில் போட்டுக்கொண்டு வளைந்து, நெளிந்து செல்கிறான்.

அவர்களின் செய்கைகள் தங்களுக்குப் பிடிக்காததை ஆண்கள்குழு நையாண்டி செய்து சிரிக்கிறது. பிறகு எல்லோரும் ஒன்றாகச் சமைத்து சாப்பிடுகிறார்கள். அவர்களில் ஒருவர் ஆடிப்பாடி அவர்களை மகிழ்விக்கிறார்.

"அந்தநாளிலே இந்த மனிதர்கள்
அனைவரும் சமமுடன் வாழ்ந்தனரே.
அப்பொருள் எனது, இப்பொருள் உனது
என்ற பேதங்கள் தோன்றவில்லை.

பெரியவர், சிறியவர், வறியவர், உடையவர் பேதமில்லை.
இது புராதன காலப்பொதுவுடமை."

அவரின் பாட்டுக்கு மற்றவர்கள் 'தகதிமி, தகதிமி' என்று சந்தமிசைக்கின்றனர். எல்லோரும் சாப்பிட்டு முடித்ததும் "இனிச் சாமி கும்பிடப் போறோம்" என்று சொல்கிறார். எல்லோரும் தங்கள் தங்கள் சமய முறைப்படி வணங்குகிறார்கள். அவர்கள் முன் தேவதை தோன்றி நடனமாடுகிறது.

## காட்சி 4:

சுவாதி என்ற இளம்பெண் தனியே ஆடிப் பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறாள். திடீரென ஆடுவதை நிறுத்தி, தரையில் அமர்கிறாள். இடுப்புக்குக் கீழே, உடைகளில் இரத்தம் வழிவதைப் பார்த்து பயந்துபோய் அலறுகிறாள். அழுகிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவளின் சத்தம் கேட்டு தாயார் ஓடிவருகிறார். மகள் பெரியவளானதையறிந்து சந்தோசப்படுகிறாள். தனது சேலையை மகளுக்கு அணிவிக்கிறாள். பிறகு ஏனைய குடும்பங்களுக்கும் செய்தியைத் தெரிவிக்கிறாள். பூசாரியை அழைத்துவர ஆள் போகிறது.

பூசாரியார் தனக்குள் கதைத்தபடி, தடியூன்றி வருகிறார். பெரியவளான சுவானேவுக்கு சமய முறைப்படி சடங்குகள் செய்து வைக்கிறார். சுவானே எதுவும் புரியாமல் பயந்துபோய் பெற்றோர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பேசாமலிருக்கிறாள்.

சடங்கு முடிந்ததும் பூசாரியின் கையாள் கூலி கேட்கிறான். சுவானேவின் தாயார் தன்னிடம் எதுவுமில்லையென்று சொல்ல, அவன் போட்டிருந்த ஆபரணமொன்றை அவன் பிடுங்கிச் செல்கிறான். இதனால் அவர்கள் கோபமடைகிறார்கள்.

இதன் பின்பு சுவானேவின்தாயாரும், இன்னொரு பெண்ணும் தங்களுக்குள் புதுச் சேலைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தாங்கள் பரிமாறிக்கொண்ட சேலைகளைத்தங்கள் உறவினர்களுக்கு காட்டி மகிழ்கிறார்கள்.

சுவானேவுக்கு திருமணம்பேசப்படுகிறது. சேலை பரிமாறிக்கொண்ட பெண்ணும், அவள் கணவனும் தங்கள் மகனை அழைத்து வருகிறார்கள். அவனோ விபரம் புரியாமல் மறுக்க, பெற்றோர் வற்புறுத்தி சம்மதிக்க வைக்கிறார்கள்.

இளைஞன் சுவானே அருகில்வந்து புல்லாங்குழல் இசைக்கிறான். இருவரும் சேர்ந்து நடனமாடுகிறார்கள். அப்போது அவர்களின் குடும்பத்தவர்களும், உறவினர்களும் வந்து ஆடிப்பாடி மகிழ்கிறார்கள். சுவானேவுக்கும் இளைஞனுக்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

புதுத் தம்பதிகள் குடும்பம்நடத்த ஆரம்பிக்கிறார்கள். சுவானே முதலில் வெட்கமடைந்தாலும் கணவன் பின்னர் எல்லாம் சொல்லிக் கொடுக்கின்றான்.

ஒரு கர்ப்பிணிப்பெண் வருகிறாள். அவள் கணவன் செய்தியறிந்து சந்தோசப்படுகிறான். உறவினர்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். இவர்கள்புதுத்தம்பதிகளிடம் வருகிறார்கள். சுவானேவும் கர்ப்பமாயிருப்பதை அறிந்து சந்தோசப்படுகிறார்கள்.

## காட்சி 5 :

பூசாரி நொண்டியபடி நடந்துவந்து தரையில் அமர்கிறார். தனது ஊனமான காலைப் பார்த்து கவலைப்படுகிறார். அப்போது 3 பேய்கள் வந்து ஆட்டம் போடுகின்றன. பூசாரியின் கைத்தடியைப் பறித்து எறிகின்றன. அவரின் தட்டைத் தூக்கி வீசுகின்றன. பூசாரி மிரண்டுபோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ய் அழுகிறார்.

திடீரென ஒரு பேய் தனது தலையிலிருக்கும் முடியைக் கழற்றி பூசாரியின் தலைக்கு சூட்டப் போவதுபோல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. பூசாரி பயம் நீங்கி வியப்படைகிறார். பேய்கள் அவரை ஆற்றின் மீது நடந்துவரச் செய்கின்றன. அப்படி அவர் நடந்து வரும்போது ஆறு இரத்தமாக மாறுகிறது. இதுவரை பிரகாசித்துக்கொண்டிருந்த சூரியன் மறைந்து கருமைநிறமாகிறது. பேய்கள் பூசாரிக்கு முடிசூட்டிவிடுகின்றன.

இதனால் மினேகாவா என்ற தீய பறவைக்கு அக்கிராமத்தின்வாசல்களை திறந்துவிட பூசாரி சம்மதிக்கிறான்.

அப்போது அந்தவழியால் வந்த சுவானே பூசாரியின் துரோகத்தைக் கண்டு அலறியபடி ஓடுகிறான். பூசாரி மினேக்காவாவுக்கு கீழ்படிந்த திருப்தியில் பேய்கள் மறைகின்றன.

பூசாரி தன்னுடைய ஊனமான கால் குணமானதை அறிந்து சந்தோசப்பட்டு ஆர்ப்பாரிக்கிறார். காலைக்குணப்படுத்திய மினேக்காவாவுக்கு நன்றி சொல்கிறார். பிறகு ஏதோ ஒரு திட்டத்துடன் கைத்தடியை எடுத்துக்கொண்டு நொண்டுவது போல் பாசாங்கு செய்தபடி நடக்கிறார்.

காட்சி 6:

தங்கள் தங்கள் பிரசவங்களைப் பற்றிக் கதைத்தபடி கர்ப்பிணிப் பெண்கள் நடந்து வருகிறார்கள். அவர்கள் நடந்துவரும்போது ஆறு இரத்தமாகியிருப்பதைப் பார்க்கிறார்கள். உடனே அலறுகிறார்கள். பிரசவவேதனை ஏற்பட்டு துடிக்கிறார்கள். தரையில் விழுந்து புரண்டு அழுகிறார்கள்.

அவர்களுக்கு குறைப் பிரசவமேற்பட்டு குழந்தைகள் இறந்து பிறக்கின்றன. இறந்த குழந்தைகளைப் பார்த்து தாய்மார்கள் மூர்ச்சையடைகிறார்கள். இவர்களைத் தேடிக் கொண்டுவந்த கணவன்மார்கள் இவர்களின் நிலையைப் பார்த்து பதைபதைக்கிறார்கள். எல்லோரும் அழுகிறார்கள்.

காட்சி 7:

பறவைகள் சூழ பிரார்த்தித்துக்கொண்டிருந்த நானே என்றதேவனிடம் சுவானே இறந்த குழந்தையுடன் வருகிறான். பறவைகள் இறந்த குழந்தையைச் சுமந்தபடி பறந்து போகின்றன.

பூசாரிக்கு பேய்கள் முடிசூட்டியதைப் பற்றி சுவானே நானேவுக்குத் தெரிவிக்கிறான். இதைக் கேட்டு அவர் கவலைப்படுகிறார்.

அழிவுகள் ஆரம்பமாகப்போகின்றன, கிராமத்துக்குள் நுழையப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகும் மிஜெக்காவால் சுதந்திரப் பறவைகள் சிறையிடப்படும், துன்பங்கள் வரும் என்று நடக்கப்போவதை தானே விபரிக்கிறார். இவற்றை ஊர்மக்களுக்கு விளங்கப்படுத்தி பூசாரியின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தி, அவர்களை விழிப்பாக இருக்கும்படி சொல்லச் சொல்லி சுவானேவை அனுப்பி வைக்கிறார்.

காட்சி 8:

பின்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் பூசாரியிடம் பரிகாரம் தேடப் புறப்படுகின்றனர். சுவானே அவர்களைத் தடுக்கிறான். பூசாரி துரோகம் செய்துவிட்டதை விபரிக்கிறான். ஒரு குடும்பம் அதைச் செவிமடுப்பதாக இல்லை. இரண்டாவது குடும்பம் யோசனை செய்கிறது. மூன்றாவது குடும்பத்துப் பெண் பூசாரியிடம் போக மறுக்கிறாள்.

இப்படி இவர்கள் குழம்பிக் கொண்டிருக்கும்பொழுது பூசாரியும் கையாளும் வருகிறார்கள். முதலாவது குடும்பம் உடனடியாக பூசாரிக்கு மண்டியிடுகிறது. பூசாரியைத் தூற்றியபடியே சுவானே மற்றக் குடும்பங்களும் மண்டியிடாமல் தடுக்கிறான்.

இரண்டாவது குடும்பம் பூசாரியை நம்புவதா, சுவானேவை நம்புவதா என்று குழம்ப, பூசாரி மிஜெக்காவின் வலிமையே வல்லது எனத்தான் நிருபித்துக் காட்டுவதாக சொல்லி தனது குனமான காலை அவர்களுக்குக் காட்டுகிறார். இரண்டாவது குடும்பமும் மண்டியிடுகிறது.

"அவங்களும் போட்டாங்கள். நாங்களும் போவோம் வா" என்று மூன்றாவது குடும்பத்தின் கணவர் வற்புறுத்த, மனைவி மறுக்க, அவர்கள் இழுபறிப்பட்டு, கடைசியில் கணவர் மனைவியிடமிருந்து இறந்த குழந்தையைப் பறித்தெடுத்து பூசாரியின் காலில் விழுகிறார். சுவானே செய்வதறியாது திகைக்கிறான்.

காட்சி 9:

நல்ல தேவதை நடனமாடுகிறது. அதை தீயசக்தி வந்து கட்டி இழுத்துக்கொண்டு போகிறது.

காட்சி 10:

பூசாரி நிலப்பாவாடை விரிக்கிறார். மிஜெக்காவா என்ற தீயபறவையும் அதன் பரிவாரங்களும் ஆரவாரமாக வருகின்றன. மிஜெக்காவா பூசாரியின் தலையில் கிரீடமும் இரும்புக் கவசத் தொப்பியைப் போட்டு, கையில் ஆயுதமும் கொடுக்கிறது.

பூசாரி மக்களை மிரட்ட, மக்களிடமிருந்த பொருட்களை மிஜெக்காவின் பரிவாரங்கள் பறிக்கின்றன. பின்னர் அவை வெளியேறுகின்றன.

பூசாரி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஆயுதத்தை மக்களில் ஒருவனிடம் கொடுத்துவிட்டு அரசாளும் ஆசனத்தில் அமர்ந்து கோப்புகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்புரட்டிப் பார்க்கிறார். அவரதுகை யாலும், ஆயுதத்தை வைத்திருந்தவனு ம் அவருக்கு காவலாக நிற்கிறார்க ள்.

மக்கள் மிகவும் துன்பப்படுகி றார்கள். அவர்களது பொருட்கள் எ ல்லாம் பறிபோய்விட்டன. அவர்கள் பிச்சையெடுக்கிறார்கள். அதையும் பூ சாரியின் கலிப்படைகள் தட்டிப் ப றிக்கின்றன.

தொழிற்சாலைகளில் வேலை இயந்திரமயமாகிறது. தொழிலாளர் கள் பிழியப்படுகிறார்கள். மக்களின் அநியாயச் சாவுகளையும், பரிதாப த்தையும் உணர்ந்த ஒரு தொழிலா ளி கொதித்தெழுகிறான். அநியாயத்தி ற்கெதிராகக் குரல் கொடுக்கிறான்.

கோப்புகளைப் புரட்டிப், பு ரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த பூசாரியின் காதில் இது விழுகிறது. உடனே தனது கலிப்படைகளை ஏவி விடுகிறான். அவர்கள் அந்த தொழி லாளியை இழுத்து வந்து சித்திரவ தை செய்து கொல்கிறார்கள்.

இவற்றைப் பார்த்துக் கொ ண்டிருந்த இன்னொரு தொழிலாளி இ ரகசியமாக மக்களை அணி திரட்டு கிறான். அவர்களுக்கு புத்துணர்ச்சியூட் டுகிறான். அநியாயத்திற்கெதிரான கு ரல்கள் பலமடைகின்றன.

பூசாரி மினேக்காவாவுக்கு அழைப்பு விடுக்கிறான். மினேக்காவா வருகிறது. மக்களை இராணுவத்தில் சேரும்படி அழைப்பு விடுக்கிறது. அவர்கள் மறுக்க பலாத்காரமாக இழுத்து வந்து பயிற்சிகொடுத்து இ ராணுவ மயமாக்குகிறது. பூசாரி யாலும், மினேக்காவாவாலும் பலர் இராணுவமாகிறார்கள்.

பூசாரியும், மினேக்காவாவும் தாங்கள் உருவாக்கிய இராணுவப் படையை மக்களைக் கொல்ல அனு ப்புகிறார்கள். அநியாயத்திற்கெதிரா கக் குரல்கொடுப்பவர்கள் இராணு வத்தால் சுட்டுக் கொல்லப்படுகிறா ர்கள். இராணுவத்திலும் சாகிறார்க ள்.

காட்சி 11:

நானே வந்து கொல்லப்பட் ட மக்களைப் பார்த்து அழுகிறார். இந் நேரத்தில் கலைஞர்கள் ஒவ் வொருவராக வந்து தங்கள் நாடு களைப் பற்றிச் சொல்கிறார்கள். முதலில் இலங்கையர் வந்து "ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போரில் உயிர்நீத்த அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிகள்" என்று தமிழில் சொல்லிவிட்டு "எங்களது நாட்டில் சாப்பிடுவதற்காக மட்டுமே மக்க ள் வாயைத் திறக்கிறார்கள். அங்கு மனித உரிமைகள் முற்றாக நசுக்கப் படுகிறது. இலங்கை" என்று ஆங்கிலத் தில் சொல்கிறார்.

(தொடர்ச்சியும், விமர்சனமும் அடுத்த கலத்தில்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

செப்ரெம்பர் 1989 இலம்:21

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி .............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்.

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியச் சந்திப்பில் பரிசு வாங்குவதற்கு மறுப்புத் தெரிவித்த பார்த்திபன் கூறியுள்ள கருத்து வரவேற்கக் கூடியது. ஏனையவர்களும் பரிசு வாங்கியிருக்கக் கூடாது. எழுத்தாளர்களை வாய் மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ ஊக்கப்படுத்தலாம். பரிசு வழங்கி அவர்களைக் கேவலப்படுத்தக் கூடாது.

தூண்டிலில் நிறைய எழுத்துப் பிழைகள் உள்ளன. இதனையும் கருத்தில் எடுத்தால் என்ன?

ந. பானு
சிங்கப்பூர்

வரவர தூண்டிலில் கருத்துகளும், வளர்ச்சியும் கூர்மைபெற்று வருவது இனங்காணக் கூடியதாக உள்ளது. தங்கள் கருத்துகளை அல்லது நிலைப்பாடுகளை இனங்காட்ட முன்வராது 'பத்திரிகையில் வரும் கருத்துகளுடன் எமக்கு உடன்பாடு இருந்தாக வேண்டும் என்ற அவசியப்பாடு இல்லை' என்ற வியாபாரத்தனமான தப்பித்தல் வாதம் சமீபகால ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகள் பலதில் வெளித் தெரியும் குணம்சமாகும். இதிலிருந்து நீங்கலாக, இந்த நிலைப்பாட்டிற்கு எதிராக கருத்திற்கு முகம் கொடுக்கும் ஆரோக்கியமான போக்கு தூண்டில் போன்ற ஓரிரு சஞ்சிகைகளிலேயே தென்படுகிறது.

அன்றியும் ஆசிரியரின் தனிப்பட்ட கருத்தியல் ஆளுமையுடன் புத்தகம் வருவது எளிது. ஆசிரியர் குழுவின் ஆளுமையுடன் புத்தகம் வெளியிட இயலாது என்ற அனுபவ வாதம் பேசுகின்ற புத்தக வெளியீட்டாளர்களும் எம்மிடம் இல்லாமலில்லை. கூட்டுவேலைத் திட்டம், ஒருமைப்பாட்டுணர்வு, இன்று வளர்த்தெடுக்கப்பட வேண்டியதாகும்.

'புதிய நாசிகள்' பற்றிய பாரதியின் ஆய்வு இன்று அவசியமான வெளிப்பாடாக உள்ளது. இவ்வகையான ஆய்வுகளே எமக்குத் தேவையானவை. பாசிசத்திற்கும், மூலதனத்திற்குமுள்ள தொடர்பு, அதிகார வர்க்கம் நாசிகளை வளர்த்தெடுக்கும் போக்கு ஆய்வில் ஓரளவு இனங்காட்டப்பட்டுள்ளது.

இன்று நாம் தங்கியுள்ள ஒவ்வொரு நாட்டினதும் சமூகவியல் பற்றிய அறிமுகம் எமக்கான உண்மை ஒளியை தரிசிக்க உதவும். இவ்வகையில் பிரான்சில் க. கலாமோகன், ஜேர்மனியில் பாரதி போன்றோரின் பங்களிப்புடன் எமது உழைப்பும் இணைய வேண்டும்.

சுகன்
பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்